# செஞ்சியைப் பார்.

ஞ்சியின் பண்டைச் சரிதமும், தேசிங்கு ராஜன்
ரலாறும், கோட்டையிலுள்ள கட்டிடங்களின்
பரங்களும் கலர் படங்களுடன் அடங்கியுள்ளன.



தொகுத்தவர்:

விந்தசாமி,

:: செஞ்சி.

1
157
V2113.5
N48
114027

# செஞ்சியைப் பார்.

செஞ்சியின் பண்டைச் சரிதமும், தேசிங்கு ராஜன் வரலாறும், கோட்டையிலுள்ள கட்டிடங்களின் விபரங்களும் கலர் படங்களுடன் அடங்கியுள்ளன.

தொகுத்தவர்:

மா. கோவிந்தசாமி,

ஆசிரியர், செஞ்சி.

திருவாளர்

S. A. தேவனாயகய்யா M. L. A. அவர்களின்

மதிப்புரை கொண்டது.

1948 ] [ விலை அணா 10

கிடைக்குமிடம்:— மா. கோவிந்தசாமி,
ஆசிரியர், செஞ்சி.

# மதிப்புரை.

புராதன சரித்திரங்கள் ஒருபுறமும், புராண இதிகாசங்கள் இன்னொருபுறமும், பண்டைய பக்தர்கள் சரிதம் மற்றொருபுறமும், தமிழ்நாட்டுப் பேரறிஞர் சரிதம் வேறொருபுறமும், வீரத் தமிழரசர்களின் சரிதம் பிரிதொரு புறமுமாகத் தமிழ் நாட்டின் சிறப்பை வெளியாக்குகின்றன. இந்தியாவில் ஆங்கில ஆக்ஷி தோன்றியபின் மேல்நாட்டுக் கல்வி வளர்ந்து சரித்திரங்கள் திருத்தியும் மாற்றியும் எழுதப்பட்ட காலந் தொட்டு தமிழ் நாட்டின் சிறப்பை விளக்கும் சரித்திரங்கள் எழுதப்படுவது நின்றதுடன் உண்மை சரித்திரங்கள் வெளியாவதும் தடுக்கப்பட்டன.

செஞ்சியைப்பற்றிய உண்மை சரிதத்தையும் கோட்டைக் கட்டிடங்களின் விபரங்களையும் தெரிந்துகொள்ளப் பலர் அவாவுற்றதின் காரணமாக ஆசிரியர் மிகவும் சிரமப்பட்டு இப் புத்தகத்தை எழுதி முடித்திருக்கிறார். கி. பி. 1345ல் செஞ்சியை ஆண்ட கோப்பண்ண ஆர்யா காலத்தில் செஞ்சி அரசாங்கம் வடக்கே வேங்கடம்முதல் தெற்கே ஸ்ரீரங்கம் வரை பரவி இருந்ததென்ற சரித்திர உண்மை தற்கால தமிழகத்திற்கு மிக்க அவசியமான குறிப்பாகும். செஞ்சியின் சரிதம் தமிழ்நாட்டுச் சரிதமே ஆகையால் தமிழ் நாட்டின் எல்லையை நிர்ணயிக்கவேண்டிய இச்சமயத்தில் இக்குறிப்பு பேருதவியாக இருக்கும். அறுநூறு வருடங்களுக்கு முன்னரே தமிழ் நாட்டின் வடக்கு எல்லை வேங்கடம் என்பதை உணர்ந்து ஆந்திரர்கள் சென்னைபற்றிய விவாதத்தில் இறங்காதிருக்க இப்புத்தகம் ஆதாரமாகும்.

தேசிங்கின் சரிதம் தமிழ் வாலிபர் உள்ளத்தில் எழுச்சியையும் வீர உணர்ச்சியையும் உண்டாக்குவதுடன் நட்பின்

சிறப்பையும் தெற்றென எடுத்துக் காட்டுகிறது. பண்டைக் காலமுதலே தமிழ் நாட்டிலுள்ள இந்து முஸ்லீம் வாலிபர்கள் தாய்நாட்டின் சுதந்தரத்தைக்காக்க ஒன்றுபட்டுப் போர் புரிந்தனர் என்பது இக் கதையின்மூலம் நன்கு விளங்குகின்றது.

செஞ்சிக் கோட்டையின் பல்வேறு பாகங்களையும் சிறப்பித்து விளக்கி எழுதியிருப்பது பொன்னேபோல் போற்றத் தக்கது. இப்பணியிலிறங்கிய ஆசிரியர் முயற்சி மிகவும் பாராட்டற்குறியது. தமிழகம் இவருக்கு நன்றி செலுத்துவதுடன், இப்புத்தகத்தைப் பெரிதும் ஆதரித்து ஆசிரியரை ஊக்குவிக்குமென நம்புகிறேன். ஆசிரியர் மேலும் மேலும் தன் நோக்கங்களில் வெற்றிபெற ஆண்டவன் அருள் புரிவாராக.

Cuddalore N. T.
2—1—48.

**S. A.** தேவனாயகய்யா
M. L. A.

# முகவுரை.

---

பேரன்புடையீர்!

தன்னகத்தே ஒரு மலைக் கோட்டையைத் தாங்கிப் பன்னூறு வருடகாலம் தென்னாட்டில் மிகப் பிரசித்திபெற்றிருந்த செஞ்சியின் வரலாற்றை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமே. நமது நாட்டின் பண்டைப் பெருமையையும், நாகரீகத்தையும், பண்டை அரசர்கள் ஆட்சி முறையையும் இத்தகைய கோட்டைகளே தெற்றெனை எடுத்துக் காட்டுகின்றன. செஞ்சியிலுள்ள கோட்டைக் கட்டிடங்களில் கல்வெட்டுகள் இல்லாததால் இதர இடங்களிலுள்ள கல்வெட்டுகளிலிருந்தே செஞ்சியின் சரிதம் ஒருவாறு குறிக்கப் பட்டுள்ளது. செஞ்சியின் பூர்வீக சரித்திரத்தையும் கோட்டையிலுள்ள கட்டிடங்களின் விபரங்களையும் விளக்கும் முறையில் ஒரு புத்தகம் வெளியிடவேண்டுமென பல பெரியோர்களும் நண்பர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பல சரித்திரங்களிலுள்ள செஞ்சி சம்மந்தமான குறிப்புகளைத் தொகுத்தும், வயது முதிர்ந்த பல பெரியோர்களைக் கேட்டும் இப்புத்தகம் எழுதியுள்ளேன். இதில் கோட்டையில் காணப்படும் கட்டிடங்களின் விபரங்களைத் தெளிவாகக் கொடுத்துள்ளதால் தினந்தோறும் கோட்டையைப் பார்க்கவரும் பலருக்கு இப் புத்தகம் பெரிதும் பயன்படும். இதில் ஏதேனும் குறைகள் காணப்படின் எடுத்துரைத்தால் நன்றி அறிதலுள்ளவனுவேன். இப்பணியில் எனக்கு ஆதரவளித்த பலருக்கும், மதிப்புரை தந்து சிறப்பித்த உயர்திருவாளர் S. A. தேவனுயகய்யா M. L. A. அவர்களுக்கும் நன்றி செலுத்திக்கொண்டு அன்பர்கள் யாவரும் ஆதரிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

**மா. கோவிந்தசாமி,**

ஆசிரியர், செஞ்சி.



கோட்டையின் தென்கிழக்கு மூலையிலுள்ள
வெங்கட்டராமன் கோயில்.

# செஞ்சியைப் பார்.

## பண்டைச் சரிதம்.

சென்னைப்பட்டினம் சிறு கிராமமாய் இருந்த காலத்தில், சிறந்த மலைக்கோட்டையைத் தன்னகத்தே பொருத்திப் பல நாடுகளுக்குத் தலைநகரமாயிருந்து பெரிய பட்டினமாக விளங்கிவந்த செஞ்சிமாநகரம், இன்று சிறு கிராமம் என்று சொல்லக்கூடிய நிலையில் தென்னாற்காடு ஜில்லாவின் வடமேற்கு மூலையில் ஒரு தாலுக்காவின் தலைநகராக இருந்து வருகிறது. இதையொட்டியே '**செஞ்சி அழிந்து சென்னைப் பட்டினம் உண்டாயிற்று**' என்று ஒரு பழமொழி வழங்கிவருகிறது. ஆயினும் அங்குள்ள மலைக் கோட்டைகள் தங்கள் பண்டைப் பெருமையைக் கைவிடாது இந் நாட்டின் புராதன நாகரீகத்தை விளக்கும் முறையில் மலைகள்மீது கம்பீரமாய் நின்று புன்னகையுடன் தோற்றமளிப்பது மக்களை '**வாருங்கள் செஞ்சியைப் பாருங்கள்.**' என்றழைப்பதுபோல் காணப்படும். தென்னிந்தியாவிலுள்ள மலைக்கோட்டைகளில் மிகப் பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் செஞ்சிக்கோட்டையேயாகும். செஞ்சி என்ற பெயர் உண்டாகப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆதியில் செஞ்சிப் பிரதேசம் சிங்கபுரநாடு என்றே வழங்கி வந்தது. அது நாளடைவில் சிங்கிநாடு என மாறி

பிறகு செஞ்சி என மருவிற்றென்றும், அப் பிரதேசங்களைக் காக்கும் ஏழு கன்னிகளில் மூத்தக் கன்னியான செஞ்சியம்மன் பெயர் வழங்குகிறதென்றும், அநுமார் சஞ்சீவி மலையைத் தூக்கிச் சென்ற காலத்தில் ஒரு துணுக்குச் சிதறி விழுந்ததாகவும், அதனால் சஞ்சீவி என்பது செஞ்சியென மருவி வழங்குகிறதென்றும், கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சஞ்சீவிராயன் பெயரையொட்டி செஞ்சி என்று பெயர் வைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். இராஜ ராஜ சோழனுடைய இரண்டாவது சகோதரனை இரண்டாவது ஆதித்திய சோழன் (கி. பி. 985-1013) காலத்திய கல்வெட்டுக்களிலிருந்து செஞ்சிப் பிரதேசம் சிங்கபுரநாடு என்றே வழங்கிவந்ததாகத் தெரிகிறது. ஆரியர்களுக்குப் பயந்து தெற்குநோக்கிவந்த திராவிடர்கள் சிங்கபுர நாட்டில் நீண்டகாலம் வசித்து வந்துள்ளார்கள். மற்றும் சிங்கபுரம் மேலச்சேரி இருக்குமிடங்கள் விஷ்ணு செஞ்சியென்றும், தற்போதைய செஞ்சியும் அதன் தெற்கேயுள்ள பிரதேசங்களும் சிவ செஞ்சியென்றும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு காலத்தில் செஞ்சி வடக்கே சங்கராபரணி நதி முதல் தெற்கே பொன்னம்பூண்டி ஒதியத்தூர் வரை சுமார் பத்து மைல் நீளமும், மூன்று மைல் அகலமுமுள்ள ஒரு பெரிய பட்டினமாக இருந்து வந்துள்ளது. தென்னாட்டிலும் வடநாட்டிலும் ஆண்டுவந்த சிற்றரசர்களும் பேரரசர்களும் செஞ்சிக் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். அதனால் இக் கோட்டைப் பலதடவைத் தாக்கப்பட்டிருந்தாலும் தன் பண்டைப் பெருமையை முற்றிலும் இழக்காதிருந்து வருகிறது.

# 3

இத்தகைய கோட்டையை இங்கே கட்டுவதற்கு இங்குள்ள இயற்கை வசதிகளே காரணமாய் இருந்தன. ஒரு கோட்டையின் பாதுகாப்புக்கு வேண்டிய மலையரண், நீரரண், காட்டரண் முதலிய இயற்கையரண்கள் இங்கே பொருந்தியுள்ளன. கோட்டைப் பிரதேசத்திலிருந்து எப்பக்கம் திரும்பினாலும் சுமார் இருபத்தைந்து மைல் சுற்றளவுக்கு உயர்ந்த மலைகள் காணப்படுவது பயங்கரமாயிருக்கும். அம்மலைகள்மீதுள்ள நீண்ட கற்கள் பீரங்கிகளைப்போல் நின்று '**விரோதிகளே உள்ளே வராதீர்**' என்று சொல்லுவதுபோல் காணப்படும். மலைகள் மீது ஓங்கி வளர்ந்திருக்கும் தாவரங்கள் காற்றினாலசைந்தசைந்து '**நண்பர்களே வாருங்கள். விரோதிகளே செல்லுங்கள்.**' என்று சொல்லுவதைப்போலிருக்கும். மலைச்சந்துகளில் வசிக்கும் பக்ஷிகளும், மிருகங்களும் அன்பரை அழைப்பதும் அல்லாரை விரட்டுவதும் போன்று செய்யும் நாதம் காதைப் பிளக்கும். சங்கராபரணி நதி நகரின் மூன்று பக்கங்களுக்கு நீரரணாய் அமைந்துள்ளது. மலைப்பக்கங்களில் வளைந்து வளைந்தும், நதிப்படுகையிலுள்ள கற்களில் மோதி மேலெழுந்து மெல்லிடை மாதர் நடனம் செய்வதுபோலவும், நகரைவிட்டுப் போக மனமில்லாது திரும்பித் திரும்பிப்பார்த்துச் செல்லுவது போலவும் ஓடும் தண்ணீர கண்ணைக்கவரும் காக்ஷியாகும். மற்றொரு பக்கத்து நீரரணாய் விளங்கும் இரண்டு ஏரிகள், தங்கள் இதயத்தில் பெருத்த நீர் நிலையைத் தாங்கி நாட்டைக்காக்கும் வீரர்களைப் போல் பெருமிதத்துடன் நிற்கின்றன. நகரின் முப்புறங்களில் ஓங்கி உயர்ந்த மரங்களையும், பல்வேறு செடி கொடி மூலிகைகளையும் தம்முள்ளிருத்தி

ஆண்மைமிக்க ஆடவரைப்போல் தலை நிமிர்ந்து விரோதிகள் நகருள் நுழையாதபடி காவல் புரிந்து வருவன போன்று காடுகள் வியாபித்திருக்கின்றன. காட்டில் வாழும் மயில் குயில் போன்ற பறவை இனங்கள் சந்தோஷத்துடன் ஆரவாரித்து '**அன்பர்களே வருக! வருக!!**' என்றழைப்பதுபோன்ற சங்க நாதம் ஆனந்தத்தையும், விரோதிகளை மறைந்து கவனிக்கும் உளவாளிகளைப்போல மரப் பொந்துகளிலும் கற்குகைகளிலும் மறைந்து வாழும் புலி, சிறுத்தை, முள்ளம்பன்றி முதலிய காட்டு மிருகங்கள், '**பகைவர்க்கிங்கிடமில்லை**' என்று சொல்லுவது போன்று செய்யும் சப்தம் பயங்கரத்தையும் உண்டாக்கும். இத்தகைய இயற்கை அரண்கள் மத்தியிலே செந்நெல் விளையும் செழுமையான வயல்களாலும், சாலை சோலைகளாலும் சூழப்பட்டு செஞ்சி நகரம் அமைந்துள்ளது கோட்டைப் பிரதேசம் நகரின் மேற்கே இருக்கிறது. அக்கோட்டைப் பிரதேசத்திலுள்ள மலைகள் மீதும், தரையிலும், கோட்டைப் பிரதேசத்திற்கு வெளியிலும் பண்டைய கோட்டைக் கட்டிடங்களும், கோயில்களும் சில சிதைந்தும் சில சிதையாமலும் காணப்படுகின்றன.

செஞ்சிப் பிரதேசத்திலுள்ள காடு மலை ஆறு போன்ற இயற்கை வசதிகளை ஆதாரமாகக்கொண்டு திராவிடர்கள் பன்னூறு வருடகாலம் இங்கு வசித்துவந்தார்கள். ராஜராஜசோழன் காலத்தில் சிங்கிநாடு என வழங்கிவந்த செஞ்சிப் பிரதேசம் சோழ நாட்டுடன் சேர்க்கப்பட்டது, ஆனாலும் செஞ்சிக்கு அப்பொழுது அவ்வளவு முக்கியத்துவம் ஏற்படவில்லை. ஜெயங்கொண்ட சோழன் காலத்தில்

ஜெயங்கொண்டான் என்ற கிராமத்தையும், பூலோக தேவசோழன் காலத்தில் தேவனூர் என்ற கிராமத்தையும் செஞ்சிப் பிரதேசத்தில் ஏற்படுத்தினார்கள். பிறகே செஞ்சியில் கோட்டைக் கட்டப்பட்டது.

ஆனந்தக்கோன் என்பவர் செஞ்சிப் பிரதேசத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஒரு இடையன். அவர் வழக்கமாக ஆட்டுக்குத் தழை வெட்டும் ஒரு மரத்தின் கீழ் ஏராளமான செல்வம் இருப்பதாக பக்கத்திலிருந்த ஒரு கருங்கல்லில் எழுதியிருந்ததை அவ்வழியே வந்த ஒரு சந்நியாசிமூலமறிந்து, அதைக் கண்டுபிடித்து அச்செல்வத்தைக் கொண்டு கி பி. 1200ல் செஞ்சி மலையில் ஒரு கோட்டைக்கட்டி அதற்கு முதலில் கமலகிரியென்றும் பிறகு ஆனந்தகிரியென்றும் பெயரிட்டார். அவர் சுற்றுப்புறத்திலுள்ள சில கிராமங்களைத் தன்னுள்ளடக்கி ஒரு சிற்றரசரைப்போலிருந்துவந்தார். அதுமுதலே செஞ்சி தென்னாட்டில் ஒரு பிரசித்தமான இடமாயிற்று. ஆனந்தக்கோனுக்குப் பிறகு செஞ்சி அரசராய் வந்த கிருஷ்ணக்கோன் என்பவர் கி. பி 1240ல் ஆனந்தகிரிக்கு வடக்கேயுள்ள மலையில் மற்றொரு கோட்டைக்கட்டி அதற்குக் கிருஷ்ணகிரியென்று பெயரிட்டார். அவருடைய குமாரர்கள் கோனேறிக்கோன், கோவிந்தக்கோன் என்பவர்கள் காலத்தில் கிருஷ்ணகிரிக்குப் படிகள் கட்டப்பட்டதுடன் ஆனந்தகிரியின் அடிவாரத்தில் **வேணுகோபால சுவாமி** ஆலயமும் கட்டப்பட்டது. கி. பி. 1300ல் புலியக்கோன் என்பவர் செஞ்சி அரசனானார். இவரே கோன் வம்சத்தின் கடைசி அரசர். இவர் கோட்டைக்குள் இரண்டு பெரிய

குளங்கள் வெட்டினதுமன்றி தஞ்சாவூர், வேட்ட வலம் போகும் மார்க்கங்களில் ஆங்காங்கு குளங்கள் வெட்டிப் பக்கத்தில் மண்டபங்கள் அமைத்தார். கோட்டைக்கு வெளியில் பல வீடுகளையும், சத்திரங் களையும் கட்டினர். கோன் வம்சத்திற்குப் பிறகு செஞ்சிக் கோட்டையைக் குறும்பர்கள் என்ற ஒரு கூட்டத்தினர் கைப்பற்றிக்கொண்டனர் கி. பி. 1330ல் கோட்டி லிங்கக்குறும்பன் என்பவர் செஞ்சியை ஆண்டுவந்த காலத்தில் கோட்டையைச் சுற்றி அலங்கங்கள் அமைத்துப் பட்டினத்தையும் விசாலப்படுத்தினர். ஒரு குதிரைப் படையையும், காலாட்படையையும் சேகரித்துக் கோட்டையைப் பாதுகாத்துவந்தார். அவ்வமயம் ஆங்காங்கு பல சிறு ராஜ்யங்கள் தோன்றின. கோட்டை இருந்த காரணத்தால் செஞ்சியே இதர ராஜ்யங்களைவிடத் தலைசிறந்ததாக விளங்கிற்று. செஞ்சியின் முக்கியத் துவத்தை யுணர்ந்த சோழர்கள் கி. பி. 1341ல் ஆனகுந்தி அரசன் மகாராயன் என்பவனைத் துணை யாகக்கொண்டு செஞ்சியைக் கைப்பற்றித் தங்கள் பிரதிநிதி நரசிங்க உடையார் என்பவரிடம் ஒப் படைத்தனர். அக்காலத்தில் சோழ ராஜ்யத்தின் பிரதான ஸ்தானமாய் செஞ்சியேயிருந்துவந்தது.

நரசிங்க உடையாருக்குப் பிறகு வீரவிஜயராய ரும் அவருக்குப்பின் வெள்ளாளராயரும் செஞ்சியை ஆண்டுவந்தனர். வெள்ளாளராயர் காலத்தில் திரு வண்ணமலை கோயில் பெரிதாக்கப்பட்டது. அச் சமயத்தில் வந்தவாசியில் பூபதிராய உடையார் ஆண்டுவந்தார். பிறகு ஹொய்ஸலர்கள் செஞ்சி யைக் கைப்பற்றிச் சிறிதுகாலம் ஆண்டுவந்தனர். சில வருஷங்களுக்குப்பின் விஜயநகர ராஜ்யம் தலை

தூக்க ஆரம்பித்தது. விஜயநகர அரசர்களான புக்கன், ஹரிஹரன் என்பவர்கள் தென்னாட்டிற்கு விஜயம் செய்தகாலத்தில் செஞ்சியின் முக்கியத்துவத்தை யுணர்ந்து, அதைத் தாக்கிக் கைப்பற்றிக் கோப்பண்ண ஆர்யா என்ற பிராமணரைத் தங்கள் பிரதிநிதியாக நியமித்து செஞ்சியை ஆண்டுவரும்படி செய்தனர்.

அவர்காலத்தில் செஞ்சி ராஜ்யம் வடக்கே வேங்கடம் முதல் தெற்கே ஸ்ரீரங்கம்வரை பரவியிருந்தது. கோப்பண்ண ஆர்யா கி. பி. 1371-72ல் சிங்கபுரத்திலிருந்த காளி கோயிலை மூடி **ரங்கநாதர் ஆலயம்** அமைத்தார். ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்கநாதர் ஆலயத்தைப் புதுப்பித்தார். கி. பி. 1382ல் விஜயநகர அரசனாயிருந்த விருபாக்ஷியின் அனுமதிபெற்று அரசாங்கத்தில் ஊழியம் செய்துவந்த பிராமணர்களுக்கு பறையந்தாங்கல், ஆலம்பூண்டி என்ற கிராமங்களை சர்வ மானியமாகக் கொடுத்தார். தக்காணத்தில் விஜயநகர அர்சர்களின் வெற்றிக்காகப் பெரிதும் உதவி செய்த நாய்க்கர்களிடம் செஞ்சி ராஜ்யத்தை ஒப்படைத்துத் தான் பிரதிநிதியாகயிருந்து ஆண்டுவரும்படி இரண்டாவது ஹரிஹரன் ஏற்பாடு செய்தார். அதன்மூலம் கி. பி. 1397ல் கிருஷ்ணப்ப நாய்க்கர் என்பவர் செஞ்சி அரசரானர். கிருஷ்ண தேவராயர் காலத்தில் செஞ்சி ராஜ்யம் மேலும் பலப்படுத்தப்பட்டது. ராகவ நாய்க்கர், வெங்கடப்ப நாய்க்கர் என்ற இரு சேனாதிபதிகளை செஞ்சியில் நியமித்து அவர்களிடம் ஐநூறு குதிரை வீரர்களையும், இரண்டாயிரம் சிப்பாய்களையும் ஒப்புவித்தார். அவர்கள் சித்தூர் காளஹஸ்தி அரசர்களை வென்று செஞ்சி அரசருக்குக் கப்பம் கட்டும்படி செய்தனர்.

கி. பி. 1464ல் எழுதிய ஒரு செப்புப் பட்டயத்தில் வெங்கடபதி நாய்க்கர் செஞ்சி அரசரென செதுக்கப்பட்டிருக்கிறது. பிறகு வையப்பா, துப்பாக்கி கிருஷ்ணப்பா என்பவர்கள் செஞ்சியை ஆண்டுவந்தனர். செஞ்சியை ஆண்டுவந்த நாய்க்க அரசர்களில் துப்பாக்கி கிருஷ்ணப்பா பிரசித்திப் பெற்றவர். அவர்காலத்தில் மூன்று மலைகளையும் சேர்த்து அலங்கம் அகழி முதலியவைகள் கட்டிக் கோட்டைக்கு வேண்டிய பாதுகாப்புகள் ஏற்படுத்தி, ஆனந்தகிரி என்றிருந்த பெயரை ராஜகிரி என்று மாற்றினர். மற்றும் பல மலைக்கோயில்களும் கலியாண மகாலும் கீழேயுள்ள நெற்களஞ்சியமும் அவர் காலத்திலேயே கட்டப்பட்டன. அச்சமயம் ஜைன மதம் செஞ்சிப் பிரதேசத்தில் பரவ ஆரம்பித்தது. துப்பாக்கி கிருஷ்ணப்பா கி பி. 1521 வரை செஞ்சியைத் தலைநகராகக்கொண்டு நெல்லூர் முதல் கொள்ளிடம் வரை மிகப் பிரசித்தியுடன் ஆண்டுவந்தார். அவருக்குப்பின் வெங்கடபதி நாய்க்கர், முத்தியாலு நாய்க்கர், அச்சுத நாய்க்கர் இவர்கள் செஞ்சியை ஆண்டுவந்தனர். முத்தியாலு நாய்க்கர் காலத்தில் **வெங்கட்டராமன் கோயில்** கட்டப்பட்டது. அவருக்குப்பின் வெங்கடப்ப நாய்க்கரும், கோபால் நாய்க்கரும் கி. பி. 1600 வரை செஞ்சியை ஆண்டனர். வரதப்ப நாய்க்கர் காலத்தில் திருப்பறங்குன்றத்திலுள்ள குமாரசாமி ஆலயத்திற்கு ஒரு தங்கப்பல்லக்கும், ஏராளமான நிலங்களும் தானமளித்துள்ளார். செஞ்சியில் ஆண்ட நாயக்க அரசர்களுக்கு மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவுமிருந்து திறம்பட அரசாங்கத்தை நடத்திச்சென்றவர்கள் வேளாள மரபினரென்றும் அவர்களில் முக்கியமானவர்

நந்தகோபால் பிள்ளையென்றும் சொல்லுகிறார்கள். கி. பி. 1614ல் நடந்த தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பிறகுகூட செஞ்சியை நாயக்க அரசர்கள் ஆண்டு வந்துள்ளனர். ஆனால் தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பிறகு விஜயநகர ராஜ்யம் சீர்குலைய ஆரம்பித்தது. பீஜப்பூர் சுல்தான்கள் தலை தூக்கினர். செஞ்சியை ஆண்ட கடைசி நாயக்க அரசரான அப்பா நாய்க்கரென்பவர் போதிய திறமையும் தைரியமுமற்றவர். அவர் காலத்தில் பீஜப்பூர் சுல்தான் மீர்ஜம்லா என்பவர் செஞ்சியின்மீது படையெடுத்து 28—12—1648ல் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டார். அப்பொழுது அரண்மனையிலிருந்த நான்குகோடி தங்க நாணயங்களும், இருபதுகோடி வெள்ளி ரூபாய்களும், ஏராளமான ஆபரணங்களும் அவருக்குக் கிடைத்தன. அதே சமயத்தில் கூடலூர், தேவனாம்பட்டினம் இன்னும் சில ஊர்களும் சுல்தானால் கைப்பற்றப்பட்டன. மதுரையிலிருந்த திருமலை நாய்க்கர் மகன் சொக்கநாத நாய்க்கரும், செஞ்சியைச் சுற்றியிருந்த சிற்றரசர்களும் சுல்தான் படைகளைத் துரத்திவிட்டு செஞ்சியைக் கைப்பற்ற முயன்றும் பலனில்லாமல் போயிற்று.

**பீஜப்பூர்** சுல்தான் தன் பிரதிநிதியாக சையத் நஜீர்கான் என்பவரை நியமித்துச் செஞ்சியை ஆண்டுவரும்படி செய்தார். செஞ்சி பாதுஷாபாத் என்றும் அதனரசரைக்கில்லேதார் என்றும் பீஜப்பூர் சுல்தான்கள் அழைத்தார்கள். திருவண்ணாமலை, வழுதாவூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களில் தனி கில்லேதார்கள் நியமிக்கப்பட்டனர். தேவனூர், மலையனூர், உளுந்தூர்பேட்டை முதலிய

இடங்களிலும் செஞ்சியைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் முகம்மதியர்களைக் குடியேற்றினர். அச்சமயம் புதுச்சேரி ஒன்றரைமைல் சுற்றளவுள்ள சிறு கிராமமாய் இருந்தது. பிரஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் தங்கி வியாபாரம் செய்துக்கொள்ள கி. பி. 1674ல் செஞ்சி கில்லேதார் அனுமதியளித்தார். ஆனால் பீஜப்பூர் சுல்தான்கள் நீண்டகாலம் செஞ்சியை ஆண்டுவர முடியவில்லை. அச்சமயம் மகாராஷ்டிரர்கள் தலைதூக்க ஆரம்பித்தனர்.

தென்னிந்தியாவில் வெற்றிமேல் வெற்றியடைந்துவந்த சிவாஜியின் படைகள் கி. பி. 1677ல் செஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டன. அதுமுதல் பீஜப்பூர் ராஜ்யம் க்ஷீணதசையடைய ஆரம்பித்தது. ஒருபக்கம் மகாராஷ்டிரர்களும், மற்றொருபக்கம் முகலாயர்களும் பீஜப்பூர் சுல்தான்களை ஒடுக்கிவிட்டனர். சிவாஜி பத்தாயிரம் துருப்புகளை செஞ்சியில் நிறுத்தித் தன் சேனாதிபதி ராம்ஜிநளக் என்பவரை தன் பிரதிநிதியாக செஞ்சிக்கு அரசராக்கினார். மகாராஷ்டிரர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கவும், தென்னிந்தியாவில் அவர்கள் ஆதிக்கத்தை ஒழிக்கவும் முகலாயர்கள் பெருமுயற்சி செய்தனர். அடிக்கடி முகலாயர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டுவந்தது. பிறகு சிவாஜியின் இரண்டாவது புத்திரர் செஞ்சி அரசரானார். அவர் காலத்தில் செஞ்சியைக் கைப்பற்ற எண்ணி ஔரங்கசீப் பலதடவை செஞ்சியைத் தாக்கினார். ஆனால் ஒவ்வொரு தடவையும் மகாராஷ்டிரர்கள் தீவிரமாகப் போராடி முகலாயர்களை செஞ்சிப் பிரதேசத்தை விட்டுத் துறத்தினர். சாந்தாஜி என்பவர் செஞ்சி அரசராயிருந்தபொழுது

புதுச்சேரி, கூனிமேடு, பறங்கிப்பேட்டை முதலிய இடங்களுக்கு சுபேதார்களை நியமித்தார். பறங்கிப் பேட்டையில் கப்பலை நிறுத்தி வியாபாரம் செய்துக் கொள்ள டச்சுக்காரர்களுக்கு அனுமதியளித்தார்.

கி. பி. 1680 ஏப்ரலில் சிவாஜி இறந்தார். கி. பி. 1681ல் சாம்பாஜி என்பவர் செஞ்சி அரசரானார். செஞ்சியைச்சேர்ந்த கூடலூரில் கப்பலை விடவும், வியாபாரம் செய்துக்கொள்ளவும் கி. பி. 1684ல் ஆங்கிலேயருக்கு சாம்பாஜி அனுமதியளித்தார். சிவாஜிக்குப் பிறகு மகாராஷ்டிர ராஜ்யம் க்ஷீண தசையடைய ஆரம்பித்தது. கி. பி. 1686ல் முகலாயர் பீஜப்பூரைக் கைப்பற்றிக்கொண்டதும் செஞ்சி மீதும் அவர்கள் பாயக்கூடுமென சாம்பாஜி அச்சங் கொண்டார். அவர் எண்ணியபடியே கி. பி. 1689ல் முகலாயர்கள் செஞ்சிமீது படையெடுத்து சாம்பாஜி யைக் கைதி செய்தனர். இருந்தாலும் மகாராஷ்டிர சேனைகள் விடாது போராடி முகலாயர்கள் செஞ்சி யைக் கைப்பற்றிக்கொள்ள முடியாதபடி செய்தனர்.

சாம்பாஜியின் சகோதரர் ராஜாராம் என்பவர் செஞ்சி அரசரானார். அவர் மிக்கத் திறமைசாலி. சேனைகளை அதிகப்படுத்தி செஞ்சியைப் பாதுகாத்து வந்தார். அவர் காலத்தில் கி. பி. 1690ல் ஔரங்க சீப், ஜுல்பிகர்கான் என்ற சேனாதிபதி மூலம் ஏராளமான படைகளையனுப்பி செஞ்சியைக் கைப் பற்றும்படி உத்திரவிட்டார். அவ்வாறே செஞ்சி முற்றுகையிடப்பட்டது. முற்றுகை ஏழு வருஷம் தொடர்ந்து நடந்தது. மகாராஷ்டிர ராஜ்யம் மிகவும் க்ஷீணதசையடைந்து சிதறுண்டு போனதால் செஞ்சியிலிருந்த மகாராஷ்டிரர்களுக்கு வெளியி

லிருந்து போதிய உதவி கிடைக்கவில்லே. அதனால் முற்றுகையைச் சமாளிக்க முடியாத நிலேயில் ராஜாராம் மாறுவேஷத்துடன் செஞ்சியைவிட்டு ஓடிப் போனார். அவருடைய சேனாதிபதிகள் வேறு வழியின்றி சரணாகதியடைந்துவிடவே கி. பி. 1698 ஜனவரியில் ஜுல்பிகர்கான் செஞ்சியைக் கைப் பற்றிக்கொண்டு இரண்டு வருஷகாலம் முகலாயரின் பிரதிநிதியாக செஞ்சியை ஆண்டுவந்தார்.

தென்னாட்டில் தன்னுடைய வெற்றிக்காகப் பெரிதும் உதவிசெய்த தன்னுடைய ரஜபுத்ர சேனாதிபதிகளில் முக்கியமானவரான சரூப் சிங்கிடம் செஞ்சி ராஜ்யத்தை ஒப்படைக்கும்படி ஔரங்கசீப் ஜுல்பிகர்கானுக்குத் தாக்கீது அனுப்பினார். அவ்வாறே 18—1—1700ல் சரூப்சிங் செஞ்சி அரசரானார். சரூப்சிங் மிகுந்த நிர்வாகத்திறமையுடையவர். அவர்காலத்தில் ஹிந்து முஸ்லீம் யாவரும் ஒற்றுமையுடனும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். கி பி. 1708ல் சததுல்லாகான் என்பவர் ஆற்காடு நவாபாக நியமிக்கப்பட்டார். ஜுல்பிகர்கான் செஞ்சியை முற்றுகையிட்ட காலத்தில் கூடலூரிலிருந்த ஆங்கிலேயர்கள் அவருக்கு உதவி செய்தது காரணமாக அவர்களிடம் அவர் வரி வசூலிக்கவில்லே. ஆனால் சரூப்சிங் ஆங்கிலேயர்கள் கொடுக்க வேண்டிய பாக்கி வரிப்பணத்தைப் பலதடவை கேட்டும் கொடுக்கத் தவறியதால், இரு பெரிய ஆங்கிலேய அதிகாரிகளேச் சிறைப்படுத்திச் செஞ்சியில் கொண்டுவந்து வைத்துவிட்டார். அதனால் கோபங்கொண்ட ஆங்கிலேயர்கள் 16—7—1711ல் செஞ்சி அரசர் சரூப் சிங்குக்கு எதிராக கூடலூர் எல்லேயில் கலகம் செய்தனர். ஆனால் சரூப்சிங்

அக் கலகத்தைச் சுலபமாக அடக்கி ஆங்கிலேயர்களைத் தலைதூக்கவொட்டாமல் செய்துவிட்டார். வேறு வழியின்றி ஆங்கிலேயர்கள் சரூப் சிங்கிடம் சமாதானம் செய்துகொண்டு மாதம் நான்காயிரம் பகோடாக்கள் வரி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார்கள். பின்னர் சரூப்சிங், தான் செஞ்சியில் சிறைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேய அதிகாரிகளை விடுதலை செய்ததுடன், டில்லி பேரரசர்களுக்குச் சிபார்சு செய்து ஆங்கிலேயர்கள் கூடலூரில் தங்கி வியாபாரம் செய்துக்கொள்ள உரிமையும் வாங்கிக் கொடுத்தார். அவ்வாறே புதுச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரர்களும் செஞ்சி அரசருக்கு வரி கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

ஔரங்கசீப் இறந்ததும் அவர் குமாரர் பஹதுர்ஷா பட்டத்திற்கு வந்தார். மகாராஷ்டிரர்களும், ரஜபுத்திரர்களும், சீக்கியர்களும் முகலாயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து சுதந்தரமாக வாழ விரும்பியதால் முகலாய ராஜ்யம் சீர்குலைய ஆரம்பித்தது. அதனால் டில்லி அரசருக்குப் பணமும், படையும் அதிகம் தேவையாய் இருந்ததால் செஞ்சி அரசர் சரூப்சிங் பன்னிரண்டு வருஷங்களாக செலுத்த வேண்டிய பகுதிப்பணம் எழுபதுலக்ஷம் ரூபாயையும் உடனே செலுத்தவேண்டுமென்று ஆற்காடு நவாபு மூலம் வற்புறுத்தினர். ஒரே சமயத்தில் எழுபது லக்ஷம் கட்டமுடியாமல் அதே கவலையாய் சரூப்சிங் கி. பி. 1714 ஜனவரியில் உயிர்நீத்தார்.

சரூப்சிங் இறந்தபிறகு அவருடைய குமாரர் தேசிங்கு, முறைப்படி டில்லி பேரரசருக்கு அறிவிக்காமலும், அவருடைய அனுமதி பெறாமலும்

செஞ்சிக்குத் தானே அரசரானார். தேசிங்கு அஞ்சா நெஞ்சம் படைத்தவர். மாற்றானுக்கு அடிமைப் பட்டிருக்க மனங்கொள்ளாதவர். ஆகவே தேசிங்கு டில்லி பேரரசருக்குக் கொடுக்கவேண்டிய பகுதிப் பணத்தைக் கொடுக்க மறுத்ததுடன் அவருடைய தூதரையும் அலக்ஷியம் செய்தார். அதனால் டில்லி பேரரசருடைய உத்தரவுக்கிணங்க ஆற்காடு நவாப் சததுல்லாகான் செஞ்சிமீது படையெடுத்தார். தேசிங்கும் வீராவேசத்துடன் நவாபுபாளையத்தை எதிர்த்தார். ஆனால் தேசிங்கிடம் போதிய படை பலம் இல்லாததாலும் ஆங்கிலேயர்களும், பிரஞ்சுக் காரர்களும் செஞ்சியைச் சுற்றியிருந்த சிற்றரசர் களில் சிலரும் ஆற்காட்டு நவாபுக்கு உதவி செய்த தாலும் தேசிங்கு தோல்வியுற்று 3—10—1714ல் காலை ஏழுமணிக்கு இறந்தார். செஞ்சிக்கோட்டை ஆற்காடு நவாப் சததுல்லாகான் வசமாயிற்று. தேசிங்கின் சிறிய தகப்பனார் குமாரர் அலூம்சிங் என்பவர் தேசிங்குக்குச் செய்யவேண்டிய கரும காரியங்களைச் செய்தார். தேசிங்கின் வீரத்தைக் கண்டு அவரால் தங்கள் முன்னேற்றம் பெரிதும் தடைபடுமென்று எண்ணியிருந்த ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் ஆற்காட்டு நவாபுக்கு வெகுமதி களும், பாராட்டுகளும் அனுப்பினர். சததுல்லா கான் செஞ்சியிலிருந்த சகல சிப்பந்திகளையும் மத வேற்றுமை பாராட்டாது அப்படியே அமர்த்திக் கொண்டு அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

செட்டிக் குளத்திற்கெதிரே ஜும்மாமசூபாணி யில் ஒரு மசூதியையும், புதுச்சேரி வாயிலுக்கெதிரே ஒரு அழகிய மசூதியையும் கட்டினார். நான்கு வருஷகாலம் செஞ்சியில் தங்கியிருந்து தண்ணீர்

பிடிக்காது அடிக்கடி நோய்வந்த காரணத்தால் தன் மைத்துனி புருஷர் சததியர்கான் என்பவரிடம் செஞ்சி ராஜ்யத்தை ஒப்படைத்து கி. பி. 1718ல் சததுல்லாகான் ஆற்காட்டை யடைந்தார். பென்னுத்தூர் ஜாகீர்தாரர் கௌதம வெங்கட்டபதி என்பவரைத் தனக்குத் துணையாகக்கொண்டு சததியர்கான் செஞ்சியை ஆண்டுவந்தார். சததியர்கானுக்குப் பின் குலாம்ஹுசேன் என்பவர் செஞ்சி அரசரானுர். செஞ்சியின் முக்கியத்துவத்தை யுணர்ந்த பிரஞ்சுக்காரர்கள் அதைக் கைப்பற்றிக்கொள்ளப் பல சூக்ஷிகள் செய்தார்கள். கடைசியாக சில சிற்றரசர்களுடைய உதவியைக்கொண்டு 15-9-1750ல் செஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டனர். பிரஞ்சுக்காரர்கள் முன்னேற்றத்தை விரும்பாத நஜீர்ஜங் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து செஞ்சியைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று எண்ணித் தன் படைகளுடன் வந்தவாசிக்கு வந்தார். அப்பொழுது வந்தவாசி கில்லேதாரராயிருந்த குலாம்தாக்யாகான் நஜீர்ஜங்கை வரவேற்று அவருக்குவேண்டிய உதவிகள் செய்தார். அங்கிருந்து நஜீர் தன் படைகளை இரண்டாய்ப் பிரித்து ஒன்றைத் தெள்ளார், வெள்ளிமேடுபேட்டை வழியாகவும், மற்றொன்றை தேசூர் மார்க்கமாகவும் செஞ்சிப் பிரதேசத்திற்குள் கொண்டுவர முயற்சித்தார். ஆனுல் தேசூரில் நஜீர்ஜங் விரோதிகளால் கொல்லப்படவே அவருடைய படைகள் சிதறியோடின. பிரஞ்சுக்காரர்கள் செஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டதால் ஆங்கிலேயர்கள் பொருமைகொண்டு கி. பி. 1752ல் கின்னீர் என்ற சேனுதிபதி மூலம் ஒரு படையை அனுப்பி செஞ்சியைக் கைப்பற்ற முயற்சித்தனர்.

ஆனல் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து செஞ்சியைக் கைப்பற்ற முடியவில்லை. கர்நாடகத்தில் பிரஞ்சுக் காரர்களுக்குச் சொந்தமான இடங்களை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக்கொண்ட பிறகு பிரஞ்சுக்காரர்களுக்கு செஞ்சியே பிரதான இடமாயிருந்தது. புதுச்சேரி ஆங்கிலேயர்கள்வசமிருந்தபொழுதுகூட பிரஞ்சுக்காரர்கள் செஞ்சியிலிருந்தே அவர்களைத் தாக்கினர். கடைசியாக ஜெனரல்கூட் என்ற ஆங்கில சேனதிபதி ஒரு பெரும் படையுடன் செஞ்சியைத் தாக்கி 5—4—1761ல் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். ஆங்கிலேயர் செஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டபிறகு பிரஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் அடியோடு ஒழிந்தது. ஆனல் பிரஞ்சுக்காரர்கள் தூண்டுதல் காரணமாக ஹைதராலி கி. பி. 1780ல் செஞ்சியின்மீது படையெடுத்து வந்தார். ஆங்கிலேயர்கள் ஹைதராலியைத் துறத்திவிட்டனர். ஆங்கிலேயர் கைக்குப் போனதுமுதல் செஞ்சி தன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. சென்னையே பிரதான மடைய ஆரம்பித்தது. இரண்டாவது மைசூர் யுத்தத்திற்குப் பிறகு செஞ்சி அடியோடு சரித்திர சம்மந்தத்தை இழந்தது.

## தேசிங்கு.

செஞ்சியில் ஆண்ட அரசர்களில் மிக்கப் பிரசித்திப்பெற்றவர் தேசிங்கு. அவர் பத்து மாதங்களே அரசாண்டாலும் அவருடைய வீரச்செயல்கள் மக்கள் மனதில் வேரூன்றிவிட்டன. அவருடைய சரிதத்தை யாவரும் அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

# சரிதம்.

## Part II.

செஞ்சி அரசராக நியமிக்கப்பட்ட சரூப்சிங் டில்லி பேரரசருடைய ஆதிக்கத்தின் கீழ் செஞ்சியை ஆண்டுவர ஒப்புக்கொண்டார். அச்சமயம் டில்லி பேரரசருக்குக் கட்டுப்பட்டுப் பல நவாபுகளும் சிற்றரசர்களும் கப்பம் கட்டிவந்தார்கள். அத்தகைய நவாபுகளில் ஆற்காட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஆக்ஷிசெய்துவந்த ஆற்காடு நவாபும் ஒருவர். மற்றும் டில்லி பேரரசர் தமது ராஜ்யத்தைப் பல பாளையங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாளையத்திற்கும் ஒரு அரசரை நியமித்தர். அத்தகைய பாளையங்களில் செஞ்சியும் ஒன்று. செஞ்சியைச் சுற்றிப் பல பாளையங்கள் இருந்தன. சரூப்சிங் செஞ்சியை ஆண்டகாலத்தில் ஆரணிக்கோட்டையில் வெங்கட்டராயரும், திமிரிக் கோட்டையில் ஷேக்முகம்மதும், சேத்துப்பட்டில் தாவூத்கானும், திருவண்ணமலையில் சுபங்கி துரையும், கள்ளக்குறிச்சியில் கான் சாயபும், அரியலூரில் பெரிய துரையும், எட்டயபுரத்தில் பெரிய பாளையக்காரனும் சிற்றரசர்களாய் ஆக்ஷி புரிந்துவந்தனர். ஆனல் இவர்கள் யாவரும் செஞ்சி அரசருக்குக் கட்டுப்பட்டவர்களே. அதுவுமன்றி சிற்றரசர்கள் ஆற்காட்டு நவாபுக்குக் கப்பம் கட்ட வேண்டும். அவர் ஒரு பகுதி எடுத்துக்கொண்டு மீதியை டில்லி பேரரசருக்குக் கொடுத்துவிட வேண்டும். இம்முறைகள் ஔரங்கசீப் காலம்வரை ஒழுங்காய் நடந்துவந்தன. அவருக்குப் பின்னல் வந்த அரசர்கள் திறமையற்றவர்களாயிருந்ததால்

சிற்றரசர்கள் ஆங்காங்கு கிளர்ச்சிசெய்து சுயேச்சை யாய் இருக்க விரும்பினர். பேரரசருக்குக் கப்பம் கட்ட மறுத்தனர். சிற்றரசர்களுக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்படவாரம்பித்தது. இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு குண்டர்களும் சோம்பேறிகளும் கொள்ளையடித்தல், தீ வைத்தல் முதலிய கொடுமை களைச் செய்து மக்களுக்குத் துன்பம் கொடுக்க வாரம்பித்தார்கள். அதனுல் ஜனங்கள் தங்கள் தற்காப்புக்காக மற்போர், வாட்போர், சிலம்பம், குஸ்தி முதலிய யுத்த சாதனங்களில் பயிற்சிபெற வேண்டியது மிகவும் அவசியமாயிற்று.

ஆனுல் சரூப்சிங் மிக்கத் திறமையுடையவர். குதிரைச் சவாரியில் நிபுணர். டில்லி பேரரசரின் சேனுதிபதிகளில் ஒருவராயிருந்து தக்காணத்தில் நடந்த பல யுத்தங்களில் வெற்றி தேடிக்கொடுத்தவர். ஏழை, பணக்காரன், இந்து, முஸ்லீம் என்ற வேற் றுமை பாராட்டாது எல்லோரையும் சமமாய் நடத்தினுர். அதனுல் செஞ்சிப் பிரதேசத்திலிருந்த இந்து முஸ்லீம் குடிமக்கள் யாவரும் சந்தோஷமாக உண்டுடுத்து செஞ்சிக்கோட்டையையும் அரசரை யும் இமைபோல் காத்துவந்தனர். மேலும் கோட் டையைப் பாதுகாக்கப் பல ஏற்பாடுகள் செய்தார். ஒரு சிறந்த குதிரைப் படையையும், யானைப் படை யையும் தயார்செய்து கோட்டையைப் பாது காத்துக்கொண்டு தன் நற்குணமனைவி ராமா பாயுடனும், தன் ஒரே குழந்தை தேசிங்குடனும் இல்லறம் வழுவாது குடும்பம் நடத்திவந்தார்.

குழந்தை தேசிங்கு நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாக வளர்ந்து பெற்றேரையும் மற்

றோரையும் மகிழ்வித்து வந்தான். சிறு பொம்மைகளையோ அல்லது கல் மண் முதலியவைகளையோ வைத்து விளையாடுவதில் அவன் பிரியப்படுவதில்லை. வில், வாள், ஈட்டி முதலியவைகளையே அவன் விளையாட்டுக் கருவிகளாக விரும்பினான். பிள்ளைப் பருவத்திலேயே அவன் பிற்கால வீரனாவதற்குத் தேவையான அறிகுறிகள் தென்பட்டன. புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள வழுதாவூரை ஆண்டுவந்த மகம்மதிய அரசன் செஞ்சி அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவன். அவ்வரசனுடைய மகன் மோவுத்துக்காரன் என்றழைத்த மகமத்கான் என்பவன் தேசிங்குக்குப் பிடித்த நண்பனானான். அவன் சிறு வயதிலேயே செஞ்சிக்கு அழைக்கப்பட்டான். தேசிங்கைப் போலவே மகமத்கானும் அறிவிலும் ஆண்மையிலும் சிறந்து விளங்கினான். இருவரும் ஒன்றாகப் படிப்பதும், ஓடுவதும் தாண்டுவதும், மற்போர் பழகுவதும், வேட்டையாடுவதும், சிலம்பம் பயிற்சி பெறுவதுமாய் காலங்கழித்தனர். தேசிங்கு கல்வியிலும் வல்லவன். பொதுக்கல்வி பயின்றபிறகு அரசற்குறிய நூல்களையும் கற்றுத் தேறினான். வீரச் செயல்கள் புரிந்த கதைகள் கேட்பதிலும், தனக்கும் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அத்தகைய வீரச் செயல்கள் புரியவேண்டுமென்பதிலும் தேசிங்குக்கு ஆசை அதிகம். தன்னுடைய பதினாறு வயதில் ஒரு வேங்கையை எதிர்த்துப் போராடிக் கொன்றதும், மற்றொருமுறை பிரஞ்சு வீரன் ஒருவன் கொண்டு வந்த சிங்கத்தை வென்றதும், பல வீரர்களை வென்று தனக்கு யாரும் நிகரில்லையென இருமாந்து செஞ்சிக்கு வந்து வீரம் பேசிய அயல்நாட்டு வீரன் ஒருவனைத் தோற்கடித்ததும் அரசனையும் மற்றவர்

களையும் ஆச்சரியம் அடையச்செய்தது. அவனுடைய வீரத்தைக்கண்ட தந்தையாரும் மற்ற பெரியோர்களும் அவனுடைய பேரும் புகழும் உலகம் உள்ளவரை நிலைத்திருக்கவேண்டுமென்று ஆசீர்வதித்தனர். இவ்வாறு மைந்தன் தேசிங்கின் வீரத்தைக்கண்டு மனம் பூரித்தவர்களாய் அரசனும் அரசியும், மந்திரி பிரதானிகளும், மற்ற குடி படைகளும் சந்தோஷமாக வாழ்ந்துவரும் நாளில் டில்லியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு நாள் குதிரைப்பிரியரான டில்லி அரசர் பஹதுர்ஷாவிற்குச் சன்மானமாக துருக்கி வீரன் ஒருவன் ஒரு அழகிய குதிரையைக் கொண்டுவந்தான். அதை அவன் **பாராசாரியென** அழைத்தான். அதனழகையும் தோற்றத்தையும் கண்ட சக்கரவர்த்தி மிகுந்த சந்தோஷமடைந்து வீரனுக்குத் தக்க இனும் கொடுத்தனுப்பிவிட்டு அக்குதிரையை சவாரியில் பழக்க முயற்சிசெய்தார். ஆனால் அது ஒரு பெரிய முறட்டுக் குதிரையாயிருந்ததால் அதைச் சவாரியில் பழக்க முடியவில்லை. பல குதிரை வீரர்களும் சிற்றரசர்களும் குதிரையை அடக்க முடியாமல் வெட்கியோடினர். பலர் குதிரையால் கொல்லப்பட்டனர். கடைசியாகக் குதிரைகளையடக்கி சவாரியில் பழக்குவதில் வல்லுநரான செஞ்சி அரசர் சரூப்சிங் அழைக்கப்பட்டார். டில்லி அரசர் நிருபங்கண்ட சரூப்சிங் தன் மகன் தேசிங்கை விட்டுப் பிரிய மனமில்லாவிட்டாலும் பேரரசருடைய உத்திரவை மறுக்க முடியாதவராய் டில்லிக்குப் பயணமானார். டில்லி சேர்ந்ததும் அப் பாராசாரியை யடக்கப் பலவித முயற்சிகள்செய்தும் பயன்படாது போகவே, நாணமடைந்தவராய் எப்படியும் அந்தக்

29

குதிரையை யடக்காமல் செஞ்சி திரும்புவதில்லை யென்று வைராக்கியம் செய்துகொண்டவராய் செஞ்சி மன்னர் டில்லியிலேயே தங்கிவிட்டார். டில்லி பேரரசரும் அவருக்கு வேண்டிய உதவிகள் செய்துவந்தார்.

மாதங்கள் சில கழிந்தன. சரூப்சிங் செஞ்சி திரும்பிஞரில்லை. இராணி இராமாபாய் கணவரைப் பற்றிக் கவலைகொள்ள ஆரம்பித்தாள். குதிரையை அடக்காமல் செஞ்சி திரும்புவதில்லையென்ற தகவல் அவளுக்குக் கிடைத்ததும் அவளுடைய கவலை மேலும் அதிகரிக்கவாரம்பித்தது. அடிக்கடி நோய் வந்த காரணத்தால் உடம்பு மெலிந்தது. தாயின் மெலிவுக்குக் காரணமென்னவென்பதை உணர்ந் தான் தேசிங்கு. அம் முறட்டுக் குதிரையையடக்கித் தன் தந்தையை அழைத்துவரவேண்டுமென்று ஆவல் தூண்டியது. கொடாமல் கொடுத்தத் தன் தாயின் உத்திரவைப் பெற்றுக்கொண்டு தன் குல தெய்வமாகிய ரங்கஞதரைப் பிரார்த்தனை செய்து விட்டுத் தன் நண்பன் மகமத்கானுடன் தேசிங்கு டில்லிக்குப் புறப்பட்டான்.

டில்லி சேர்ந்த தேசிங்கு முதலில் தன் தந்தை யைக்காணுமல் நேரே பேரரசரிடம் சென்று, தான் செஞ்சி அரசர் சரூப்சிங்கின் புதல்வனென்றும், பாராசாரியின்மீது சவாரி செய்வதற்காக வந்திருப்ப தாகவும் தெரிவித்துக் குதிரையை அணுக அனுமதி கேட்டான். தேசிங்கின் இளமையையும், வசீ கரத்தையுங்கண்டு பேரரசர் மனந்தளர்ந்தாலும், அவனுடைய வீர மொழிகளையும், கம்பீரமான தோற்றத்தையுங்கண்டு அச்சிறுவனின் ஆவலைக்

கெடுக்க மனமில்லாதவராய் குதிரையையனுக அநுமதியளித்தார். சிறுவன் தேசிங்கு பாராசாரிமீது சவாரி செய்யப்போகும் விஷயம் காற்றேபோல் நகர் முழுதும் பரவிவிட்டது. தன் குமாரன் டில்லி வந்திருப்பதாயும் பாராசாரிமீது சவாரி செய்யப்போவதாகவும் சரூப்சிங்கு கேள்விப்பட்டு, ஓடோடி சென்றுத் தன் மகனைக் கட்டியணைத்து உச்சிமோந்தும் முரட்டுக் குதிரையிடம் போகவேண்டாமென்று பலமுறை கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் தேசிங்கு உடன்பட்டானில்லை. குதிரை பல ஆட்களால் மைதானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மன்னரும் மக்களுமாகப் பலர் சூழ்ந்திருந்தனர். இளஞ்சிங்கம் தேசிங்கு குதிரையை நன்கு கவனித்தான். குதிரையும் கம்பீரமாய் கனைத்து நின்றது. எல்லோரும் சிறுவனுடைய வீரத்தை மெச்சி ஒருவருக்கொருவர் உரையாடிக்கொண்டிருந்தனர். பல ஆட்கள் பற்றிக்கொண்டிருந்த அக் குதிரைமீது அலக்ஷியமாய் தாவி உட்கார்ந்து கடிவாளத்தைக் கையில் பிடித்துச் சிமிட்டாக்கொடுத்து குதிரையை முடுக்கினான் தேசிங்கு. குதிரை கோபங்கொண்டு அவனை கிழே தள்ளப் பலவகையில் முயன்றும் தேசிங்கு கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு குதிரை களைப்படையும்வரைத் தன் னிஷ்டம்போல் திருப்பினான். அதுவரைப் பலரை ஏமாற்றிவந்த பாராசாரியும் அச்சங்கொண்டு, கர்வமடங்கி தேசிங்கின் இஷ்டம்போல் நடக்கவாரம்பித்தது. தேசிங்கு சந்தோஷமடைந்தவனாய்க் குதிரையை பேரரசர்முன் கொண்டுவந்து நிறுத்தினான். அங்குக் குழுமியிருந்த மக்கள் யாவரும் பெருத்த ஆரவாரம்செய்து வீரச்செயல் புரிந்த

தேசிங்கைப் பாராட்டினர்கள். அக் குதிரையை ஒருவராலும் அடக்கமுடியாதென எண்ணியிருந்த பேரரசர் பேரானந்தமடைந்து தேசிங்கைக் கட்டித் தழுவிக்கொண்டு அத்தகைய வீரனுக்கே அக் குதிரைச் சொந்தமென எண்ணி, அக் குதிரையையும் உயர்ந்த வாளொன்றையும் தேசிங்குக்குப் பரிசாக அளித்தார். மற்றும் தன் சொந்தக் குதிரை **நீலவேணியை** மகமத்கானுக்குக் கொடுத்தார். டில்லி பேரரசருடைய சேனைத்தலைவர் பீம்சிங் என்பவர் தேசிங்கின் வீரத்தை மெச்சித் தன் மகள் ராணிபாய் என்பவளை தேசிங்குக்கு மணம் செய்துகொடுத்தார். ஆனால் சோதிடர் கூற்றுக்கிணங்க தேசிங்கும் அவன் மனைவியும் சிலகாலம் ஒருவரையொருவர் பார்க்கக் கூடாதென்ற தடை விதிக்கப்பட்டது. சரூப்சிங்கின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. சின்னாள் டில்லி யில் தங்கியிருந்துவிட்டு மகன், மருமகள், மகமத் கானுடன் சரூப்சிங் செஞ்சி திரும்பினர்.

சரூப்சிங் தனக்குச் செய்த உதவிக்காகவும், அவர் மகன் தேசிங்கின்மீதிருந்த அன்பு காரண மாகவும் அவரைக் கப்பம் கட்டும்படி பேரரசர் பகதூர்ஷா வற்புறுத்தவில்லை. ஆனால் அவருக்குப் பின் வந்த டில்லி நவாப் பன்னிரண்டு வருஷங் களாக சரூப்சிங் கட்டவேண்டிய பகுதிப்பணம் எழுபதுலக்ஷம் ரூபாயையும் உடனே செலுத்த வேண்டுமென்றும் இல்லாவிடில் செஞ்சியரசர் பதவிலிருந்து அவர் நீக்கப்படுவாரென்றும் ஆற் காட்டு நவாப் மூலம் வற்புறுத்தினர். ஆற்காட்டு நவாப் பாப்பையர் என்பவரை செஞ்சிக்கு அர்க் காரு அனுப்பி பேரரசரின் விருப்பத்தை யறிவித் தார். பன்னிரண்டு வருஷங்களாய் செலுத்தாம

லிருந்த பகுதிப் பணத்தை மொத்தமாக கட்ட வேண்டுமென்ற சேதிகேட்டு சரூப்சிங் திடுக்கிட்டவராய் என்ன செய்வதென்று தோன்றாமல் ஆறு மாத தவணை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அர்க்காரு பாப்பையரை அனுப்பி விட்டார். ஆனால் அவ்வளவு தொகையை ஏககாலத்தில் கொடுக்கமுடியாமல், அதே கவலையாய் நோய் வாய்ப்பட்டு சில மாதங்களில் உலகை நீத்தார். தந்தையும் இறந்து, தாயும் உடன்கட்டை யேறி விட்டதால் தாய் தந்தையரை இழந்த தேசிங்கு மிகுந்த கவலையில் ஆழ்ந்தான். அவனுடைய சிற்றப்பன் தரணிசிங்கு அரச காரியங்களை கவனித்து வந்தார். சில மாதங்கள் கழிந்தன. தேசிங்கு ஒருவாறு மனந்தேறி செஞ்சி அரசனாக மணிமுடி சூட்டிக்கொண்டான். ஆனால் முறைப்படி டில்லி பேரரசருக்குத் தான் செஞ்சி அரசனாகப்போகும் விஷயம் தெரிவித்து அவருடைய அனுமதி பெற வில்லை. தான் செஞ்சி அரசனாகுமுன் டில்லி பேரரசருடைய அனுமதி பெறவேண்டுமென்று மந்திரிகள் சொன்னதையும் தேசிங்கு பொருட்படுத்தவில்லை.

தேசிங்கின் ஆக்ஷிமுறை மக்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கியது. தன் தந்தையைப் போலவே ஏழை பணக்காரனென்ற வித்தியாசம் பாராமலும், ஜாதிமத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமலும் எல்லோரும் செஞ்சி மன்னர் என்ற உணர்ச்சியை மக்கள் மனதில் வேரூன்றச் செய்தான். தேசிங்கின் அன்பினால் வயப்பட்டப் பல்லாயிரக் கணக்கான வாலிப வீரர்கள் நாட்டின் நன்மையைக் கருதி உயிர்விடத் தயாராகப் படையில் சேர்ந்தனர். மகமத்கானைச் சேனாதிபதியாகக்கொண்ட ஒரு

சிறந்த ராணுவத்தை யமைத்து, விரோதிகள் செஞ்சியைக் கைப்பற்றவேண்டுமென்று கனவில்கூட நினைக்கமுடியாதபடி தேசிங்கு செஞ்சியை ஆண்டு வந்தான். அவ்வமயம் மகமத்கானுக்குக் கலியாணம் செய்யவேண்டுமென்று அவனுடைய பெற்றோர்கள் விரும்பியதால் மணமுடித்து வரும்படி தேசிங்கு அவனை வழுதாவூருக்கனுப்பினான்.

தேசிங்கு அரசனாகி சில மாதங்கள் கழிந்ததும் செஞ்சி அரசனால் பாக்கி வரவேண்டிய பகுதிப் பணத்திற்காக டில்லி பேரரசர் ஆற்காட்டு நவாபை வற்புறுத்தவாரம்பித்தார். சரூப்சிங் வைத்த ஆறு மாத கெடுவும் கடந்துவிட்டது. அதனால் ஆற்காட்டு நவாப் சததுல்லாகான், நீண்ட அரசியல் அனுபவம் பெற்றத் தோடர்மால் என்பவரைத் தேசிங்கிடம் மீண்டும் தூதனுப்பினார். தோடர்மால் மிகவும் தந்திரசாலி. தூது செல்வதில் வல்லவர். டில்லி பேரரசருடைய ஆதரவு பெற்றவர். சிற்றரசர்கள் யாவராலும் நன்கு மதிக்கப்படுபவர். அப்படியிருந்தும் வாலிபவீரன் தேசிங்கிடம் தூதுசெல்ல அஞ்சியவராய் வழியில் சேத்துப்பட்டில் தங்கி சேத்துப்பட்டு பாளையக்காரன் தாதேகானிடம் தேசிங்கின் குணாதிசயங்களை விபரமாக அறிந்துகொண்டு பழைய செஞ்சியென அழைத்த மேலச்சேரியில் தங்கி முறைப்படி தன் வரவை தேசிங்குக்கு அறிவித்தார். பகுதிப்பணம் சம்மந்தமாய் நவாபிடமிருந்து தூதர் வந்திருக்கிறார் என்ற சேதியறிந்த தேசிங்கு அவரைக்காண மறுத்துவிட்டான். ஆனால் அவனுடைய மந்திரிகள் தூதர் தோடர்மாலை வரவேற்க வேண்டுமென்றும், அவமதிப்பது அரச நீதியாகாதென்றும் வினயத்துடன் கேட்டுக்கொள்ளவே,

தேசிங்கு சிறிது கோபம் தணிந்தவனாய்த் தோடர் மாலைச் சந்திக்கப் புரவி ஏறினான். ஆனால் குதிரையை விட்டிறங்கி முறைப்படி வணக்கம் செலுத்தி நவாபின் தூதரைக் கண்டுகொள்ள தேசிங்கு இணங்காததால் தோடர்மால் அச்சங்கொண்டு தேசிங்கைச் சந்திக்க விரும்பவில்லை. எப்படியும் எடுத்த காரியத்தில் வெற்றி காணவேண்டுமென்ற வைராக்கியங் கொண்ட தோடர்மால் மறுநாள் தன் விருதுகளை நீக்கிப் பழுத்த விஷ்ணுபக்தன் வேடத்தில் அரசசபைக்கு நேரில் சென்று தேசிங்கைச் சந்தித்தார். இயற்கையாக விஷ்ணு பக்தர்களிடம் அன்புடைய தேசிங்கு தூதரை மரியாதையுடன் வரவேற்றுக் குசலம் வினவினார். அப்போது தோடர்மால் ஒருவாறு பயந்தணிந்தவராய் டில்லி பேரரசர் ஆற்காட்டு நவாப் இவர்களிடம் பெற்றுவந்த கடிதங்களை தேசிங்கிடம் கொடுத்தார். கடிதங்களைப் பார்த்த தேசிங்கு கண்கள் சிவக்கப் பற்களை நறநறவென்று கடித்துக் கடிதங்களைத் தூதர் முன்னிலையியே கிழித்தெறிந்தான். தோடர்மால் அச்சம் மிகுந்தவராய் தேசிங்கைச் சாந்தப்படுத்தித் தன் வயமாக்கப் பலவகையில் முயன்றும் பயன்படாதுபோகவே தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று புறப்படவாரம்பித்தார். அப்பொழுது தேசிங்கு "பகுதி செலுத்தப் பணம் கிடையாது. வேண்டுமானால் கோட்டையைச் சுற்றிக்கிடக்கும் கற்களையும், இந் நாட்டில் அதிகமாய் கிடைக்கும் வரகு வைக்கோலையும் கொண்டுபோகட்டும். வேண்டாமென்றால் சண்டைக்கு வரட்டும். கத்திமுனையில் பணந்தருகிறேன்" என்ற செய்தியை நவாபுக்குச் சொல்லியனுப்பினான். தோடர்மாலும் நவாபையடைந்து நடந்தவற்றைக்

கூறிச் சென்றார். நவாபும் நன்றாய் யோசித்துச் செஞ்சியின்மீது படையெடுப்பதைத் தவிற வேறு வழியில்லையென ஓர்ந்து டில்லி பேரரசருடைய அனுமதியும் பெற்றார். அன்று முதல் செஞ்சிமீது படையெடுக்கவேண்டிய ஏற்பாடுகள் நடக்கவாரம்பித்தன. பல ரகசிய ஒற்றர்களையனுப்பிக் கோட்டையின் ரகசியங்களை உணர்ந்தார் நவாபு. மற்றும் தேசிங்கின் வீரத்தையும் படைப் பலத்தையுங்கண்டு பொறாமை கொண்ட சில சிற்றரசர்களுடைய பக்க பலத்தையும் நவாபு திரட்டினார். செஞ்சி அரசனால் தங்கள் முன்னேற்றம் வெகுவாய்த் தடைப்பட்டதால் அவன்மீது வெறுப்புக்கொண்டிருந்த ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் செஞ்சிமீது படையெடுத்தால் நவாபுக்குத் தாங்கள் உதவி செய்வதாக வாக்களித்தார்கள். சகல முன்னேற்பாடுகளும் செய்துகொண்ட பிறகு நவாபின் படைகள் செஞ்சியை நோக்கிப் புறப்பட்டன. தங்கள் படையெடுப்பை அறிவிக்கும் முறையில் வரும் வழியிலிருந்த செஞ்சி அரசாங்கத்திற்குட்பட்ட தேவனூர் முதலிய கிராமங்களை நவாபின் படைகள் கொள்ளையடித்தன.

கொள்ளையால் அல்லலடைந்த மக்கள் யாவரும் ஒன்று திரண்டு செஞ்சிக்கு விரைந்துவந்து நவாபு பாளையம் செஞ்சிமீது படையெடுத்து வருவதையும், தேவனூர் முதலிய கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்ட விபரத்தையும் அதன்மூலம் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் தேசிங்கிடம் எடுத்துக் கூறினர். அதைக்கேட்ட தேசிங்கு சினங்கொண்ட நாகம்போல் சீறியெழுந்து நவாபின் படைகளை எதிர்த்துத் துரத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு

கள் செய்யத் துரிதமாக நடவடிக்கை எடுக்கவாரம் பித்தான். தாய்நாட்டின் சுதந்தரத்தைக் காக்க மக்கள் யாவரும் தயாராகவேண்டுமென்று எங்கும் பறையறைவிக்கப்பட்டது. அவ்வமயம் சேனுதிபதி மகமத்கான் செஞ்சியிலில்லே. அவனுடைய பெற்ருேர்கள் விருப்பத்திற்கிணங்க மணம் முடித்துவர வழுதாவூர் சென்றிருந்தவன் செஞ்சிவந்து சேர வில்லே. உடனே புறப்பட்டு வரும்படி மகமத்கா னுக்கு சேதி அனுப்பப்பட்டது. வழுதாவூரிலோ மகமத்கான் கலியாணத்திற்காகத் தக்க ஏற்பாடுகள் செய்து எங்கும் ஒரே குதூகலமாயிருந்தது. மகம் மதிய குருக்கள் மணவினைத் தொடங்கி இதர சடங்கு களே முடித்துவிட்டுத் தாலியை ஆசீர்வதித்துத் தந்த னர். தாலி கட்டப்போகும் சமயம் செஞ்சியி லிருந்து சென்ற குதிரை வீரன் மணமகன் மகமத் கானிடம் தேசிங்கின் நிருபத்தைக் கொடுத்து நின் ருன். செஞ்சிக்கு வந்த ஆபத்தையறிந்த மகமத் கான் சரீரம் துடித்து ஆற்காடு நவாபை அரை நொடி யில் துரத்துவதாக சபதஞ் செய்துகொண்டு செஞ் சிக்குப் புறப்படவாரம்பித்தான். கலியாணத்தின் இதர சடங்குகளே முடித்துத் தாலிகட்டாது செல்லு வது அபசகுனமாகுமென்றும் மேற்கொண்ட சடங்குகளே முடித்துவிட்டு மறுநாள் போகலாமென பெற்ருேரும் பெரியோரும் கூறித் தடுத்தும் கேளாது தன் நண்பன் தேசிங்கையும் செஞ்சியை யுமே மனதிலுன்னி நீலவேணிமீது பாய்ந்து செஞ்சியை நோக்கினுன் மகமத்கான்.

இதற்குள் நவாபின் படைகள் செஞ்சி எல் லேயை நெருங்கிவிட்டன. நவாபின் படைகள் சங்கராபரணி நதியைத் தாண்டிவராமல் தடுத்து

திருத்தும்படி தம் வீரர்களுக்கு உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டுத் தன் குலதெய்வமாகிய சிங்கபுரம் ரங்கனாதரை வணங்கி சண்டைக்குச்செல்ல அனுமதி கேட்டான். தான் நினைத்தபடி ரங்கனாதர் அவனுக்கு அனுமதியளிக்காவிட்டாலும் எப்படியும் அன்றே யுத்தத்திற்குச் சென்று ஆற்காட்டு நவாபைத் துரத்த வேண்டுமென்று எண்ணி போர்உடை தரித்து யுத்த சன்னத்தனாய் வெளியில் புறப்பட்டான். தேசிங்கு சண்டைக்குப் புறப்பட்ட விஷயமறிந்த சிற்றப்பன் தரணிசிங்கு ஓடோடிவந்து அவனை வழிமறித்து அன்று வெள்ளிக்கிழமை யென்றும், அன்றைய தினமே தேசிங்கும் பாராசாரியும் பிறந்ததினமென்றும் அன்றிருந்து மறுநாள் யுத்தத்திற்குப் போவது நல்லதென்றும் வற்புறுத்திக் கூறினார். ஆனால் தேசிங்கு அவ்வார்த்தைகளுக்கு மதிப்புத் தந்தானில்லை. எதிரி எல்லையை யடைந்துவிட்டபிறகு நாளையும் நலனையும் எதிர்பார்த்துச் சோம்பி இருப்பவன் சுத்த வீரனல்ல என்று தரணிசிங்குக்கு பதிலிறுத்திவிட்டு தேசிங்கு வெளியில் சென்றான். சென்றவனுக்குத் திடீரெனத் தன் மனைவியின் ஞாபகம் வந்தது. ஒரு குறிப்பிட்ட காலம்வரை கணவனும் மனைவியும் சந்திக்கக்கூடாதென்ற சோதிடர் கூற்றினால் தனி அரண்மனையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவந்த தன் மனைவியிடம் விடைபெற்றுச் செல்லவேண்டுமென்ற எண்ணம் உதிக்கவே அவன் கால்கள் அவன் மனைவியிருந்த கன்னிமாடத்தை நோக்கி நடந்தன. தன் சிற்றப்பன் அனுமதி பெற்றுத் தன் மனைவிக்கும் தனக்குமிடையில் திரையிடச் செய்து செஞ்சிக் கோட்டையை முற்றுகை செய்திருக்கும் நவாபின் படைகளை வெருட்டுவதற்காகப்

போருக்கெழுதத் தனக்கு விடையளிக்க வேண்டுமென்று தேசிங்கு தன் மனைவியைக் கேட்டான். அதுவரைத் தன் கணவன் முகத்தையே பாராது காவலில் வைக்கப்பட்டிருந்த ராணிபாய் திடுக்கிட்டாள். அன்றோடு சோதிடர் வைத்த காலம் முடிவடைவதால் மறுநாள் தன் அருமைக் கணவருடன் கூடி ஆனந்தமாயிருக்கப்போவதாக எண்ணியிருந்த ராணிபாய்க்கு அவ்வார்த்தைகள் நாராசம் போலிருந்தன. இருந்தாலும் ஒருவாறு மனந்தேறினவளாய், அன்றிருந்து மறுநாள் யுத்தத்திற்குப் போனால் கணவனை தரிசிக்கும் பாக்கியம் பெறுவதுடன் அவளும் யுத்தத்திற்கு வருவதாகவும் ராணிபாய் கூறினாள். ஆனால் அவளுடைய வார்த்தைகளை செவிமடுக்காமல் அப்புறம் செல்ல யத்தனித்தத் தன் கணவனைத் தடுத்து யுத்தத்திற்குப் போகுமுன் அவனுடைய வீரக் கரத்தையாகிலும் தெரிசிக்கும் பாக்கியம் கிடைக்க அருள்செய்ய வேண்டுமென்று இறைஞ்சிக் கேட்டுக்கொண்டாள் ராணிபாய். தேசிங்கும் ஒருவாறு சம்மதித்தவனாய்த் தன் வாளால் திரையைக் கிழித்து அவ்வழியே தன் வலக்கரத்தை நீட்டினான். நீட்டிய கரத்தைக்கண்ட கன்னிகை அதை அன்புடன் பற்றி முத்தமிட்டசமயம் அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் அக் கரத்தின்மேல் விழுந்தன. தேசிங்கு வெடுக்கென கையை இழுத்துக்கொண்டு தன் புருஷன் யுத்தத்திற்குச் செல்லுங்கால் நெற்றியில் திலகமிட்டு வழியனுப்பும் பெண்கள், பிறக்கும் ரஜபுத்திர குலத்தில் பிறந்த அவள் கண்ணீர் விடுதல் பொருத்தமல்லவென்று சொல்லிக் கோபத்துடன் வெளியே புறப்பட்டான்.

வெளியில் வந்ததும் மணக்கோலத்துடன்

வாளேந்தி வீராவேசத்துடன் யுத்தத்திற்குச் செல்ல விடைபெறுவான் வேண்டித் தன் வரவை எதிர் பார்த்து நிற்கும் தன் அருமை நண்பன் மகமத் கானைக் கண்டு வழுதாவூரில் நடந்த விஷயமறிந்து அன்பின் பெருக்கால் அவனைக் கட்டியணைத்து ஆனந்தக்கண்ணீருதிர்த்தான். மனைவினைப் பெரி தாகக் கருதாது நண்பனுக்கு நற்சமயத்தில் உதவி செய்யவேண்டுமென்று நாட்டங்கொண்டு ஓடோடி வந்த நண்பனை வாயார வாழ்த்தினான். மகமத்கா னும் தேசிங்கிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு சேனை களை தயார்செய்யவாரம்பித்தான். பல்லாயிரக்கணக் கான போர் வீரர்கள் வெற்றிவிருது கூறிக்கொண்டு அணிவகுத்து நின்றனர். அவர்களிடம் தேசிங்கு பின்வருமாறு பேசினான். "நம் தாய் நாட்டிற்கு ஆபத்து வந்திருக்கிறது. அதை வேற்றான் கைப்பற்ற எண்ணுகிறான். மாற்றானுக்கடிமைப்பட்டு மான மிழப்பதைவிட வீரத்துடன் நாட்டைக் காக்கப் போரிட்டுமாள்வதே மேலாகும். தாய்நாட்டைக் காப்பதில் ஜாதிமதபேதத்தைப் பாராது எல்லோரும் ஒன்றுபட்டுப் போரிடவேண்டும். நொடிப்பொழுதில் நம் விரோதிகள் நம் நாட்டின் எல்லையைவிட்டுத் திரும்பி ஓடும்படி செய்து நம் மானத்தைக் காத்துக் கொள்ளவேண்டும்." இவ்வீர மொழிகளைக்கேட்ட வீரர்கள் பன்மடங்கு ஆவேசங்கொண்டு போருக் கெழுந்தனர். தானே முன்சென்று நவாபின் பாளை யத்தை நாசம் செய்துவருவதாக மார்தட்டி நீல வேணிமீது பாய்ந்து சேனையை நடத்திக்கொண்டு மகமத்கான் புறப்பட்டான். புறப்பட்டவன் சங்கரா பரணிக்கு வடக்கேயுள்ள நீலாம்பூண்டியில் தங்கி யிருந்த நவாபுபாளையத்தில் புகுந்தான்.

மகமத்கானையும் செஞ்சி வீரர்களையும் எதிர்த்து நிற்கமுடியாமல் நவாபின் படைகள் நாலாபக்கங் களிலும் சிதறியோடின. நவாபின் சேனைத் தலைவ னை தௌலத்கான் ஓடி மறைந்தான். செஞ்சி வீரர்களின். போர்த்திறமையைக்கண்டு நவாபின் பாளையம் நடுநடுங்கிப் போயிற்று. மகமத்கான் ஓடும் படைகளைத் துரத்திக்கொண்டு செல்லும்பொழுது மறைந்திருந்த தௌலத்கான் யுத்தமுறைக்குப் புறம் பாக மகமத்கானைப் பின்புறமிருந்து சுட்டான். குண்டு கழுத்தின் பின்புறம் பாயவே, பின்புற மிருந்து சுடும் பேடி யாரென மகமத்கான் திரும்பிப் பார்த்தபொழுது, மற்றொரு குண்டு நெற்றியில் படவே அவன் குதிரையினின்று கீழே விழுந்து உயிர்நீத்தான். இதற்குள் மூன்றுவது குண்டு நீல வேணியின் வயிற்றில் பாய்ந்தது. அக்கணமே குதிரையும் கீழே விழுந்து மடிந்தது. தலைவனை இழந்த செஞ்சி வீரர்கள் சோர்வுற்றனர். சமய மறிந்து தௌலத்கான் தன் சேனைகளை முடுக்கினான். மேலும் செஞ்சியிலிருந்து படைகள் உதவிக்கு வரா வண்ணமும் அங்குள்ள படைகளை செஞ்சிக்குத் திரும்பவிடாமல் மடக்கித் தாக்கவும் மலையனூர் ஏரியை வெட்டிவிட்டு சங்கராபரணியில் வெள்ளப் பெருக்கை உண்டாக்கினான். தன் படைகளில் ஒரு பிரிவை மேலச்சேரிக்கு மேற்குப்பக்கமாய் சென்று வேலூர் வாயிலை நெருங்கும்படி அனுப்பினான். தன் நண்பன், வஞ்சனையால் முறைதவறி வீரமற்ற ஒருவ னல் பின்னலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டா னென்ற விஷயமறிந்ததும் சொல்லொணாத் துயர மும், அடக்கொணா ஆவேசமுங் கொண்டவனாய் தேசிங்கு நவாபுபாளையத்திற்குள் புகுந்து சாடு

சாடென்று சாடி போடுபோடென்று போட்டான். பல சிறந்த வீரர்களை வெட்டி வீழ்த்தினன். செஞ்சி வீரர்களும் புத்துணர்ச்சி பெற்றுப் போர் புரிந்தனர். நவாபின் சேனைகள் மீண்டும் சிதறுண்டு ஓடின. அவர்களுடைய சேனவீரர்கள் தேசிங்கைத் தடுத்து நிறுத்தப் பல சூக்ஷிகள் செய்தும் பயன்படவில்லை. தன் நண்பன் மகமத்சானைக் கொன்ற சேனதிபதி தௌலத்கானையே தேசிங்கு தேடியலைந்தான். மிகுந்த சிரமத்துடன் அவன் மறைந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவனை வெட்டி வீழ்த்தித் தன் நண்பனைக் கொன்ற பழியைத் தீர்த்துக்கொண்டான் தேசிங்கு. தேசிங்கை வென்று செஞ்சியைக் கைப்பற்றத் தன்னல் முடியாதென உணர்ந்ததாலும், தேசிங்கின் வீரத்தை மெச்சி அவனுக்கு மேலும் தொந்தரவு கொடுக்கக்கூடாதென்று எண்ணியதாலும், ஆற்காட்டு நவாப் மீண்டும் தோடர்மாலை தேசிங்கிடமனுப்பி சமாதானம் செய்துகொள்ள விரும்பினர். ஆனல் இளஞ்சிங்கம் தேசிங்கு சமாதானத்திற்கிணங்கவில்லை. தோடர்மால் எவ்வளவு முயன்றும் தேசிங்கின் மனதை மாற்ற முடியவில்லை. தன் நண்பன் மகமத்கானைக் கொன்றபிறகு சமாதானத்திற்கே இடமில்லையென்று சொல்லித் தோடர்மாலை உதாசீனம் செய்துவிட்டுப் புலிபோல் பாய்ந்து தேசிங்கு போரிட்டான். கடைசியில் நவாபின் படைகள் பல கொல்லப்பட்டன. சில ஒளிந்துகொண்டன. சில ஓட ஆரம்பித்தன. தேசிங்கை எதிர்த்து நிற்கவே ஆளில்லாது போயிற்று. தேசிங்கை எதிர்த்து வீரத்தினல் வெல்ல முடியாதெனவெண்ணிய நவாப் அவனைச் சூதினல் கொல்ல வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, முறைக்கு

மாறாக யானையின் வயிற்றுப்பக்கத்தில் அம்பாரி கட்டி அதில் மறைந்திருந்தார். ஓடி மறைந்தவரைத் தேடிப்பிடித்துக் கொல்ல வேண்டுமென்ற எண்ணங் கொண்டு வீராவேசத்துடன் தேசிங்கு நவாபு மறைந்திருந்த இடத்தை யணுகினன். அவ்வமயம் யானைக் கடியில் மறைந்திருந்த நவாபு பாராசாரியின் ஒரு காலை ஓங்கி வெட்டினர். எதிர்பாராத வகையில் நடந்த சம்பவத்தைக்கண்டு திடுக்கிட்டு வெட்டினவன் யாரென கீழே பார்ப்பதற்குள் குதிரையின் மற்றொரு காலையும் வெட்டிவிட்டு நவாபு யானையை வேகமாய் செலுத்திக்கொண்டுபோய் அண்ணமங்கலம் மலையில் மறைந்துகொண்டார். இரண்டு கால்களும் வெட்டப்படவே பாராசாரி கீழே விழுந்து இறந்தது. குதிரையில்லாததால் விரோதியைத் துறத்திப் பிடிக்க முடியாமல் தேசிங்கு திகைத்து நின்றான். இதற்குள் நவாபின் சேனைவீரர்கள் சிதறியோடிய படைகளைத் துரிதமாகத் திரட்டி செஞ்சிப் படைகளை முழு பலத்துடன் தாக்கினர்கள். செஞ்சி வீரர்களும் தேசிங்கின் உதவி இல்லாததால் சற்றுப் பின்வாங்க ஆரம்பித்தனர். குதிரையை இழந்த தேசிங்கு மனமுடைந்தவனாய் அங்குமிங்கும் சென்று தன் நண்பன் மகமத்கான் சவத்தைக் கண்டு பிடித்துக் கட்டியணைத்துக் கோவென்றலறினன். தன் நண்பனையும் பாராசாரியையும் நினைக்க நினைக்க அடக்க முடியாத வருத்தமும் வாழ்க்கையில் திடீரென வெறுப்பும் ஏற்பட்டன. நண்பனும் குதிரையும் போனபின்பு உலகில் உயிர் வாழ்ந்திருக்க விரும்பவில்லை. இதற்குள் முதுகுகாட்டி ஓடிய நவாபின் படைகள் ரகசியமாகக் கோட்டையின் வடக்கு வாயிலையடைந்து அதைத் தாக்க ஆரம்பித்தன.

வடக்குவாயிலில் பீரங்கி சத்தம் கேட்டவுடனே நவாபின் படைகள் கோட்டையை நெருங்கிவிட்டதென வெண்ணி தேசிங்கு மேலும் மனமுடைந்தவனாய் தன் நண்பன் மகமத்கானின் சவத்தை நோக்கி "நண்பா உன்னைவிட்டு ஒருகணமேனும் பிரிந்திரேன். நீ சென்ற இடத்திற்கு இதோ நானும் வருகிறேன்." என்று சொல்லிக்கொண்டே தன் குலதெய்வமாகிய ரங்கனாதரை தியானித்த வண்ணமாகவே தன்னுடைய வாளால் தானே குத்திக் கொண்டு உயிர்நீத்தான்.

ஏற்கனவே ஒற்றர்கள் மூலம் கோட்டையின் ரகசியங்களை அறிந்திருந்ததால் நவாபின் படைகள் மிகத் துரிதமாகக் கோட்டைக்குள் புகுந்துவிட்டன. தேசிங்கு இறந்தது நவாபுபாளையத்தில் சந்தோஷத்தை யுண்டாக்கினாலும் நவாபின் மனம் பெரிதும் புண்பட்டது. தேசிங்கைப்போன்ற சிறந்த வீரன் நீண்டகாலமிருந்து வீரச்செயல்கள் புரியாமல் இளம் வயதிலேயே உயிர்நீத்ததற்குத் தான் காரணமாயிருந்ததற்காக நவாபு மனம் வருந்தினார். பிறகு தேசிங்கின் சவத்தைக் கோட்டைக்குக் கொண்டு வரும்படி உத்தரவு கொடுத்துவிட்டு நவாபும் கோட்டையை அடைந்தார். கணவன் இறந்ததையும் நவாபுபாளையம் கோட்டைக்குள் புகுந்துவிட்டதையுமறிந்த ராணிபாய் ஆராத்துயரங்கொண்டு முறைப்படி உடன்கட்டையேற முடிவு செய்தாள். தேசிங்கு இறந்ததற்குத் தான் காரணமில்லையென்றும், அவனே தற்கொலை செய்துகொண்டு இறந்தானென்றும், செஞ்சியை ராணிபாய் ஆண்டுவர சம்மதித்தால் சமாதான முறையில் ஒப்படைத்துப் போவதாகவும் நவாபு ராணிபாயிடம் தெரிவித்தார். ஆனால்

அதற்கு ராணிபாய் சம்மதிக்காமல் புருஷன் இறந்த பிறகு தனக்கு உலகத்தில் வேலையில்லையென்றும், ரஜபுத்திர முறைப்படி புருஷனுடன் தானும் உடன் கட்டையேறவேண்டுமென்றும், அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்துகொடுக்க வேண்டுமென்றும் நவாபைக் கேட்டுக்கொண்டாள். ராணியின் சாபம் தன்னை வந்தடையுமோ என்றெண்ணி அச்சங் கொண்டிருந்த நவாபு ஒருவாறு தேறுதலடைந்து, தேசிங்கின் சவத்தைத் தக்க மரியாதையுடன் கொண்டுவந்து ராணிபாய் தீக்குளிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுத்து அவர்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தார். கோட்டை முழுதும் நவாபின் வசமாயிற்று. மற்றும் ராணிபாயின் ஞாபகார்த்தமாகவும், அவள் சாபம் தன்னை வந்தடையாமலிருக்கவும் செஞ்சிக்கு வடக்கே நாற்பதுமைல் தூரத்தில் ராணிப்பேட்டையென்ற ஊரையும் நவாபு ஏற்படுத்தினர். தேசிங்கு பத்துமாதங்களே அரசாண்டு தன்னுடைய இருபத்திரெண்டாவது வயதில் இறந்துபோனாலும், தன் வீரச்செயல்களால் அழியாப் புகழ்பெற்று உலகம் உள்ளவரை மக்கள் மனதை விட்டகலாத பேறுபெற்றான்.



கோட்டையின் கிழக்குப்பக்கத்திலுள்ள் புதுச்சேரி வாயில்.

# Part III.

# கோட்டைக் கட்டிடங்கள்.

## கோட்டைப் பிரதேசம்.

தேசிங்கைப்போன்ற பல வீரர்கள் ஆண்டு வந்ததும் பன்னூறு வருடங்கள் தென்னிந்தியாவில் மகா உன்னத நிலையிலிருந்ததுமான செஞ்சிக் கோட்டையின் விபரத்தை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமே. தற்போதுள்ள செஞ்சிக்கு மேற்கே அரைமைல் தூரத்தில் கோட்டைப் பிரதேசமிருக்கிறது. இது முக்கோண வடிவத்தில் சுமார் ஐந்து மைல் சுற்றளவுள்ளது. இச் சுற்றளவில் சந்திரகிரி, ராஜகிரியென்ற மலைகள் முறையே தெற்கிலும், தென்மேற்கிலும் கிருஷ்ணகிரியென்ற மலை வடக்கிலும் வியாபித்திருக்கின்றன. சந்திரகிரியையும் கிருஷ்ணகிரியையுமிணைத்துக் கிழக்குப்பக்கத்தில் முப்பதடி உயரமுள்ள அலங்கமும், அதன் வெளிப்பக்கத்தில் எண்பதடி அகலமுள்ள அகழியும் அமைக்கப்பட்டுள்ளன. அதைப் போலவே மேற்கிலும் அலங்கமும் அகழியுமமைத்து ராஜகிரியும் கிருஷ்ணகிரியும் இணைக்கப்பட்டுள்ளன. ராஜகிரியையும் அதன் அடிவாரத்திலுள்ள முக்கிய கட்டிடங்களையும் உள்ளடக்கித் தனி அலங்கமும் அகழியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டைப் பிரதேசத்திற்குள் செல்லுவதற்குக் கிழக்கே, கிழக்கு வாயில் அல்லது புதுச்சேரி வாயிலென்றும், வடக்கே வடக்குவாயில் அல்லது வேலூர் வாயிலென்றும் இரண்டே வாயிகள் உண்டு. இவ்விரண்டு வாயில்களைத் தவிற வேறு எவ்வகையிலும் கோட்டைப் பிரதேசத்திற்குள் போகமுடியாது.

பண்டைக்காலத்தில் திண்டிவனத்திலிருந்து திருவண்ணமலை போகும்பாதை கிருஷ்ணகிரிக்கு வடக்கே இருந்தது. ஆனல் செஞ்சிக் கோட்டையை ஆங்கிலேயர் பிடித்துக்கொண்ட சில வருஷங்கள் கழித்துக் கோட்டைப் பிரதேசத்திலுள்ள கிழக்கு மேற்கு அலங்கங்களில் வழி இடித்துப் பாதை கிருஷ்ணகிரிக்கும் ராஜகிரிக்கும் மத்தியில் கோட்டைப் பிரதேசத்தைக் கடந்துசெல்லும்படி அமைக்கப்பட்டது. ஆகவே மேற்சொன்ன இரண்டு வாயில்களைத் தவிர பாதை போடுவதற்காக அலங்கங்களை இடித்த வழிகள் மூலமாகவும் தற்போது கோட்டைப் பிரதேசத்திற்குள் போகலாம். ஆனல் எவ்வழியாகக் கோட்டைப் பிரதேசத்திற்குள் சென்றாலும் ராஜகிரி அலங்கத்தைக் கடந்து உள்ளேபோக ஒரே வாயில்தான் உண்டு. புதுச்சேரி, வேலூர் வாயில்களிலிருந்து அவ்வாயிலுக்கு அழகிய ரஸ்தாக்கள் போடப்பட்டுள்ளன. கோட்டைப் பிரதேசத்திலுள்ள மலைகள்மீதும், தரையிலும், கோட்டைப் பிரதேசத்திற்கு வெளியிலும் பல கட்டிடங்களும், களஞ்சியங்களும், கோயில்களும், மசூதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில சிதைந்துவிட்டன. ராஜகிரியின் அடிவாரத்திலிருந்த அரண்மனைப் பகுதி தரையோடு தரையாக்கப்பட்டு கல் மண்மேடுமாத்திரமே தெரியும். இருந்தாலும் பண்டைக்கால இந்தியாவின் பண்பு, நாகரீகம், பண்டைக்கால அரசர்கள் அரசாங்கம் நடத்திய முறை முதலியவற்றைக் கோட்டைக் கட்டிடங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

49



# கோட்டையின் உள்ளும் கீழும்.

கோட்டையின் கிழக்கேயுள்ள புதுச்சேரி வாயில் மிக விசித்திரமானது. இவ்வாயில் வழியாகக் கோட்டைக்குள் செல்ல, ஆங்காங்குள்ள ஏழு மண்டபங்களுள் புகுந்து அவைகளிலுள்ள வாசற்படிகள் வழியாகவே செல்லவேண்டும். வாயிலின் முதல்வழி அரைவட்ட வடிவமாய் மேலே அரை வட்ட வடிவமுள்ள நான்கடி அகல மண்டபமும், அம்மண்டபத்தில் சிப்பாய்கள் மறைந்து விரோதிகள் உள்ளே நுழையுங்கால் துப்பாக்கியால் சுடுவதற்குச் சிறு துவாரங்களும் அமையப்பெற்றிருக்கிறது. வழியின் இருமருங்கிலும் காவலர்கள் பதுங்கியிருக்கப் பல ரகசிய அறைகள் வைக்கப்பட்டிருப்பது விநோதமானது. அவ்வாறே ஒவ்வொரு மண்டபத்திலுள்ள வழியின் மருங்கிலும் ரகசிய அறைகள் உண்டு. புதுச்சேரி வாயிலின் அருகில் பெரிதும் சிதைந்து மண்மேடாயுள்ள சிறைச்சாலையையும் விசாரணைக் கச்சேரியையும் காணலாம். கோட்டையின் தென்கிழக்கு மூலையிலுள்ள வெங்கட்டராமன் கோயில் பார்க்கத்தக்கது. மிக விசாலமான இடப்பரப்பையும் சுற்றிலும் இருபத்தைந்தடி உயரமுள்ள மதிள் சுவற்றையும் பெற்றுள்ள அக்கோயில் பெரிதும் சேதமடைந்திருந்தாலும், அழகிய வேலைப்பாடுள்ள தூண்களையுடைய பல பெரிய மண்டபங்களும், பிரகாரங்களும் கோபுரங்களும் பிரமிக்கத்தக்கனவாயிருக்கின்றன.

தமிழரசர்கள் காலத்தில் கட்டியுள்ள பெரிய கோயில்கள் பாணியிலேயே இக்கோயிலும் கட்டப்

பட்டுள்ளது. கோயிலுக்குள் எத்தகைய விக்கிரக மும் கிடையாது. கோட்டைப் பிரதேசத்திலும் வெளியிலும் உள்ள கோயில்கள் ஒன்றிலும் விக் கிரகமே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இவை கள் யார்காலத்தில் எப்படி எடுத்துச் செல்லப் பட்டன என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

புதுச்சேரி வாயிலின் வடக்குப்பக்கத்திலுள்ள குன்றுகளில் சிவ ஆலயமொன்றும் விஷ்ணு ஆலய மொன்றும் இருக்கின்றன. மத்தியில் கொடி நடு வதற்கு ஆழமான பள்ளத்தையுடைய கருங்கல் புதைக்கப்பட்டு சுமார் நூறடி வட்டமுள்ள கொடி மேடையும், பக்கத்தில் உயர்ந்த குன்றின் உச்சியில் பதினைந்தடி உயரமும் இருபதடி சதுரமுமுள்ள ஒரு சதுர மண்டபமும் இருக்கின்றன. அம்மண்டபம் மாலை நேரங்களில் அரசன்வந்து தங்கி காற்று வாங்கு வதற்காகக் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அக்குன்றுகளுக்கிடையில் ஒரு சுரங்கவழி செல்லு கிறது. அது வழுதாவூருக்குப் போகும் சுரங்கமென சொல்லுகிறார்கள். மற்றும் அக் குன்றுகளுக்குத் தெற்கே சுற்றிலும் மதில் சுவற்றையுடைய சுமார் இரண்டேக்கர் விஸ்தீரணமுள்ள சிங்காரத்தோட்டம் இருந்துள்ளது. தற்போதுமதில் சுவற்றின் இடிந்த பாகங்கள் காணப்படுகின்றன. அதன் பக்கத்தில் மிகப் பெரியதும் அழகுள்ளதுமான சததுல்லாகான் மசூதி இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இங் குள்ள முஸ்லீம்கள் ரம்சான், பக்ரீத் காலங்களில் அங்கு சென்று வணங்கிவருகிறார்கள். மசூதியின் தெற்கே ஒரு தண்ணீர் தொட்டி மேடை கட்டப் பட்டிருக்கிறது. அம் மேடைமீது ஒரு பெரிய தொட்டிவைத்து அதில் தண்ணீரைத் தேக்கி அரண்



கோட்டைப் பிரதேசத்திலிருக்கும் சததுல்லாகான் மசூதி.

மனைப் பகுதிகளுக்குத் தண்ணீர் அளித்திருக்க வேண்டுமென யூகிக்கப்படுகிறது. மருதிக்கு மேற்கே சென்றால் ராஜகிரி அலங்கத்திற்குள் செல்லும் வாயில் காணப்படும். வேலூர் வாயில் வழியாக ராஜகிரிக்கு செல்லும் பாதையும் இங்கு சந்திக்கிறது. அகழியில் பாலம் கட்டப்பட்டுள்ளது. அவ் வாயிலுக்குள் செல்லும் வழி வளைந்து வளைந்து ஐந்து மண்டபங்களைக் கடந்து அப்பால் செல்லுகிறது. மண்டபங்களைத் தாண்டிச் சென்றதும் வலப்பக்கத்திலுள்ள உயர்ந்த கட்டிடம் கலியாண மகால். இதுவே கோட்டைக்குள்ளிருக்கும் மிகுந்த அழகிய கட்டிடம். சுமார் நூறடி உயரமுள்ள அக்கட்டிடம் எட்டு அங்கணங்களையுடையது. ஒரு துண்டு மரத்தையும் உபயோகிக்காமல் அது கட்டப்பட்டிருப்பதுடன், அதில் ஏற இறங்க இரண்டு பக்கத்திலும் படிக்கட்டுகள் உண்டு. ஒன்று தண்ணீரை மேலே செலுத்தவும், மற்றொன்று தண்ணீர் கீழே இறங்கவும் இரண்டு குழாய்கள் பொருத்தியிருந்த துவாரங்கள் ஒவ்வொரு அங்கணத்திலும் காணப்படுகின்றன. மற்றும் ஒவ்வொரு அங்கணத்தின் மத்தியிலும் ஒரு சதுர அறையும், அறையின் மேல்பக்கத்தில் ஊஞ்சல் மாட்டுவதற்கு வளையங்களும் உள்ளன.

கலியாண மகாலுக்கு வடகிழக்கே மிக உயர்ந்த நீளமான கருங்கற் சுவர்மேடை தென்படும். கலியாண மகாலையும் அதன் பக்கத்திலிருந்த அரண்மனைக் கட்டிடங்களையும் பீரங்கி குண்டுவீச்சிலிருந்து காப்பதற்காக அம்மேடை கட்டப்பட்டதாகும். சில முக்கியமான இடங்களைக் குண்டுவீச்சிலிருந்து காப்பதற்காக இத்தகைய மேடைகள் கட்டியிருப்பதைக் கோட்டைப் பிரதேசத்தில் பலவிடங்களில் காண

லாம். கலியாண மகாலுக்கு எதிரிலும் மேற்கிலும் ஆயிரக்கணக்கான குதிரைகள் தங்கக்கூடிய லாயங்கள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. கலியாண மகாலுக்குத் தெற்கேயுள்ள மண்மேடு அரண்மனைப் பகுதியென்றும், அதுவே பெண்கள் வசிக்கும் அந்தப்புரமென்றும் சொல்லப்படுகிறது.

அந்தப்புறத்திற்கு தெற்கே ஆனைக்குளம் என்றழைக்கும் ஒரு குளம் உண்டு. அக்குளத்தைச் சுற்றி அழகான மண்டபமும் அந்தப்புறத்திலிருந்து குளத்திற்குச் செல்லுவதற்குக் குளத்தின் வடமேற்கு மூலையில் ரகசிய வழியுமிருக்கின்றன. கலியாண மகாலுக்கு மேற்கே அரசன் தங்கிக் குளிக்சப் பத்தடி சதுரமான சலவைக்கல்லும் பக்கத்தில் கிணறும் தென்படும். அதன் பக்கத்திலுள்ளதே நந்தவனம். நந்தவனத்தில் அரச குடும்பத்தினர் அமர்ந்திருக்க இருபது அடி சதுரமுள்ள மிக அழகிய சலவைக்கல்லும், சாய்ந்துகொள்ளவும் உட்கார்ந்துகொள்ளவும் பயன்படுமுறையில் அச் சலவைக் கல்லின்மேல் ஒரு தலையணைக் கல்லும் காணத்தக்கவை. நந்தவனத்திற்கு நேர் மேற்கேயிருக்கும் மண்மேடு அரசனும் மற்ற அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும் வசிக்கும் அரண்மனைப் பகுதியாகும். நந்தவனத்திலிருந்து அரண்மனைக்குச் செல்லுவதற்குப் பயன்பட்டுவந்த வளைவுப் படிக்கட்டுகளை இன்றும் அங்கே காணலாம். அந்தப்புரத்திற்கும் அரசனரண்மனைக்குமிருந்த சுரங்க வாயில் இரண்டுக்கும் மத்தியில் தென்படுகிறது. ஆனைக்குளத்திற்கு மேற்கே சிறிதுதூரத்தில் காணப்படுவது சிலம்பக்கூடம். அங்கு அரச குடும்பத்தினர் சிலப்பம் குஸ்தி முதலியவைகளில் பயிற்சி பெறு



கலியாண மகால்.

55

57

வார்கள். கட்டிடத்தைச் சுற்றி உட்பக்கத்தில் மூன்றடி அகலமுள்ள மேடையுண்டு. அம்மேடை யளவுக்கு மணலைக் கொட்டிவிட்டு சிலம்பம் பழகு வது வழக்கமாயிருந்திருக்கும் சிலம்பக் கூடத்திற்கு மேற்கே ஒரு பெரிய நெற்களஞ்சியமுண்டு. அவ் வளவு பெரிய நெற்களஞ்சியம் தென்னாட்டிலுள்ள கோட்டைகளில் எங்கும் காணப்படவில்லையாம். அக்களஞ்சியம் வாயில்பக்கம் ஒரு சிறு அறையும் மற்றப் பக்கங்களில் மூன்று பெரிய அறைகளுமாக நான்கு பாகங்களாய் பிரிக்கப்பட்டிருக்கிறது. வாயி லறையிலிருந்து மற்ற அறைகளுக்குச் செல்லப் படிக்கட்டுகளுண்டு, உள்ளே சென்று பார்த்தால் களஞ்சியத்தின் தோற்றம் பயங்கரத்தையுண்டாக் கும். களஞ்சியத்தின் வாயிலருகில் உட்புறமிருக்கும் இரண்டு படிக்கட்டுகளின் வழியாய் மேலே ஏறி கட்டிடத்தை வெளிப்பக்கம் சுற்றிவரலாம். களஞ் சியத்திற்குத் தென்மேற்கே வேணுகோபாலசுவாமி கோயிலும், பஜனைக் கூடமும் சிதைந்து காணப் படுகின்றன. அங்கே பின்னமான நடராஜர் விக் கிரகம் ஒன்றையும், வேணுகோபால சுவாமி விக்கிர கம் ஒன்றையும் காணலாம். இதுவே அரச குடும் பத்தினர் பஜனை செய்யுமிடமென்று சொல்லப் படுகிறது.

களஞ்சியத்திற்குக் கிழக்கே பன்னிரண்டடி ஆழமும், முப்பதடி சதுரமுமுள்ள ஒரு மூடு கிணற்றை மேலே சிறு வாயிலுடன் பார்க்கலாம். இது வெடிமருந்து சேகரித்து வைக்குமிடமாகும். இந்த முக்கியவிடத்தை விரோதிகளின் பீரங்கிக் குண்டிலிருந்துக் காப்பாற்றுவதற்காக எதிரில் உயா மான பெரிய கருங்கல்கட்டுமேடை கட்டப்பட்டிருக்

கிறது. வெடிமருந்து சேமிப்பறைக்குத் தென் கிழக்கே முஸ்லீம் பாணியிலும் இந்து பாணியிலு மாக நான்கு பெரிய மண்டபங்கள் உள்ளன. வேற் றரசர்கள் இங்கு விருந்தினராக விஜயம் செய்யுங் காலத்தில் அவர்களுடைய சிப்பந்திகள் இங்கே தங்குவார்களாம். களஞ்சியத்தின் எதிரில் செல் லும் பாதைவழியே தெற்கு நோக்கிச் சிறிதுதூரம் சென்றால் ராஜகிரி அலங்கத்தைக் கடக்க வாயில் காணப்படும். அவ்வாயிலைக் கடந்து வெளியில் சென்றால் வலக்கைப் பக்கமிருக்கும் சிறு சிறு கோபுரங்கள் பன்னிரண்டு ஆழ்வார்களின் ஆலயங் களாகும். அவைகளில் சில சிதைந்துவிட்டன. அவ்வாலயங்களுக்குக் கிழக்கே பெரிய மண்மேடு காணப்படுகிறது. அங்கிருந்த பெரிய கட்டிடங் களில் மந்திரி பிரதானிகள் வசித்துவந்ததாக சொல்லப்படுகிறது. சிறிதுதூரம் அப்பால் சென்றால் வலப்பக்கம் சர்க்கரைக் குளத்தையும் இடப்பக்கம் செட்டிக் குளத்தையும் பார்க்கலாம். இக்குளங்கள் கி. பி. 1300ல் செஞ்சியையாண்ட புலியக்கோன் காலத்தில் வெட்டப்பட்டவை. இவ்விரு குளங் களின் மத்தியிலேயே கோட்டையின் வடகோடிக் குச் செல்லும் பாதை செல்லுகிறது. சர்க்கரைக் குளத்தின் வடமேற்கு மூலையில் செஞ்சியின் கிராம தேவதை என்று சொல்லப்படும் **கமலக்கன்னியம்மன்** கோயிலைக் காணலாம். செட்டிக்குளத்தின் வட மேற்கு மூலையில் காணப்படுவது **சஞ்சீவிராயன் கோயில்**. அங்கு சுமார் எட்டடி உயரமுள்ள சஞ்சீவி ராயன் உருவம் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. செஞ்சியிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பலர் அடிக் கடி வந்து சஞ்சீவிராயனுக்கு அபிஷேகமும்



ராஜகிரி அடிவாரத்திலுள்ள நெற்களஞ்சியம்.

ஆராதனையும் நடத்துவார்கள். அக்கோயிலுக்கு வட கிழக்கே செட்டிக்குளக்கரை உட்பக்கத்திலிருக்கும் கருங்கற் சுவர் மேடையே தேசிங்கின் சவத்தை எறித்து அவன் மனைவி ராணிபாய் உடன்கட்டை யேறிய இடமாகும். இவ்விரண்டு குளங்களும் அதிக ஆழமானவை. கோட்டைப் பகுதிக்கு வேண்டிய தண்ணீர் முழுதும் இக் குளங்களிலிருந்தே எடுக்கப் பட்டிருக்கிறது. செட்டிக்குளத்திற்கு வடகிழக்கில் ஒரு மசூதியும் சில சமாதிகளும் இருக்கின்றன.

சதுதுல்லாகான் செஞ்சிக் கோட்டையை தேசிங்கிடமிருந்து கைப்பற்றிக்கொண்ட பிறகு ஜும்மாமசூதி பாணியில் கட்டப்பட்ட மசூதி இதுவேயாகும் இங்குள்ளவர்கள் அதை சின்ன காராஞ்சி மசூதி என்றழைக்கிறார்கள். அம்மசூதி யைச்சுற்றி மிக விசாலமான நந்தவனம் இருந் துள்ளது. நந்தவனத்தைச் சுற்றியிருந்த மதில் சுவர் இன்றும் இடிந்து விழுந்திருப்பதைக் காணலாம். செட்டிக்குளத்தின் மேற்கே செல்லும் பாதை வழியே சென்றால் ஒரு மண்டபமும் ராஜகிரிக்கு ஏறும் படிக்கட்டுகளும் தெரியும். அவைகள் சிதைந் திருப்பதால் தற்போது பயன்படுவதில்லை.

வடக்கேயுள்ள வேலூர் வாயில் மிகவும் பாது காப்பானது. அவ்வாயிலின் வழியாக மூன்று பெரிய மண்டபங்களைத் தாண்டி கோட்டைக்குள் செல்ல வேண்டும். ஒவ்வொரு மண்டபத்தின் இரு மருங் கிலும் விசாலமான திண்ணைகளும், திண்ணைகளை யடுத்துக் காவலர்கள் தங்கியிருக்க மிகப் பெரிய ரகசிய அறைகளும் உள்ளன. அவ்வாயிலையடுத்து உட்பக்கத்தில் வியாபித்திருக்கும் குன்றுகளின்மேல்

பல கொடி மேடைகளும் பீரங்கித் தாங்கிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. குன்றுகள் அதிகம் நிறைந்த இரண்டு இடங்களிலுமே கோட்டைக்கு வாயில்கள் அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது. கோட்டையின் மேற்கு அலங்கத்தையொட்டி ராஜகிரிக்கு மற்றொரு படிக்கட்டு உண்டு. அதுவும் சிதைந்திருப்பதால் பயன்படுத்துவதில்லை. இன்னும் அலங்கங்கள் மீதும் குன்றுகள் மீதும் பல காவலர்கள் தங்குமிடங்களும், கொடி மேடைகளும், பீரங்கித் தாங்கிகளும் செங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகள் செஞ்சிக்கோட்டை பிரஞ்சுக்காரர்கள்வசமிருந்தகாலத்தில் அவர்களால் கட்டப்பட்டவையாகும். இன்னும் சிறு சிறு மண்டபங்களும், கோயில்களும், மசூதிகளும் கோட்டைக்குள் பலவிடங்களில் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

---

## ராஜகிரி.

கோட்டைப் பிரதேசத்தின் மேற்கிலும் தென் மேற்கிலும் வியாபித்துப் பல மண்டபங்களையும், கோயில்களையும், சுமார் இருநூறு அடி உயரமுள்ள செங்குத்தான ஒரு குன்றையும் சுமார் ஐநூறடி உயரமுள்ள தன்மீது தாங்கிக் கம்பீரமாய்த் தோற்றமளிப்பது ராஜகிரியேயாகும். இதைப் பெரிய மலையென்றும் சொல்லுவதுண்டு. இதைச் சரிவான அடிப்பாகம், செங்குத்தான மேல்பாகம் என இரண்டாய்ப் பிரிக்கலாம். மலையின் அடிப்பாகத்தின் மேல் ஏறுவதற்கு நான்கு இடங்களில் கருங்கற்

படிகளுண்டு. மற்றவை சிதைந்திருப்பதால் மலையின் கிழக்கு அடிவாரத்திலுள்ள நெற்களஞ்சியத்தின் பின்புறமாயுள்ள படிக்கட்டுகளே தற்போது பயன் பட்டு வருகின்றன. மலையின் சரிவான பாகத்திற்கு மலையின் அடிவாரத்திலொன்றும், உச்சியிலொன்று மாக இரண்டு அலங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. மலையின் செங்குத்தான பாகத்தின் உச்சியைச் சுற்றி மற்றொரு அலங்கமிருக்கிறது. படிக்கட்டுகளின் வழியாய் மலையினடிவாரத்திலிருந்து உச்சியையடை யும் வரை இளைப்பாறுவதற்காக இரண்டு பக்கங்களி லும் திண்ணைகளையுடைய மண்டபங்கள் உள்ளன. மலையின் உச்சியை யடையும்வரை இத்தகைய மண்ட பங்கள் எட்டு உண்டு. அடிவாரத்திலிருந்து நான்கா வது மண்டபம்வரை படிக்கட்டுகள் செங்குத்தாய் ஏறுகின்றன. அதற்குமேல் சிலவிடங்களில் படி களாகவும் சில இடங்களில் பாதையாகவுமிருக்கும்.

நான்காவது மண்டபத்தில் ஒன்பதடி நீள முள்ள ஒரு பீரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அத னடிப்பக்கத்தில் 2470 என்ற லக்கம் போடப்பட் டுள்ளதைத் தவிர வேறு எழுத்துக்கள் காணப்பட வில்லை. அம்மண்டபமுள்ள இடத்திலேயே கோட் டையின் இரண்டாவது அலங்கம் கட்டப்பட்டிருக் கிறது. அதைக்கடந்து சிறிதுதூரம் சென்றால் வழி யின் வடக்கிலுள்ள சிறு குன்றில் பால ரங்கநாதர் ஆலயம் இருக்கிறது. இதன் எதிரில் ஒரு பெரிய மண்டபமுண்டு. அங்கு செல்ல படிக்கட்டுகள் உள்ளன. அதைக்கடந்து சென்றதும் மலையின் சரிவுபாகத்தின் உச்சியை யடைந்து பாதை நேர் மேற்கே செல்லுகிறது. பாதைக்குத் தெற்கே கருங் கற்படிக்கட்டுகளுடன் கூடிய ஒரு ஆழமான குள

மும், வடக்குப்பக்கத்தில் ஒரு பெரிய மண்டபமும் அதன் எதிரில் கமலக்கன்னியம்மன் கோவிலும் உள்ளன. ஹிந்து அரசர்கள்காலத்தில் சிங்கபுரம் ரங்கநாதர் விக்கிரகத்தை இம் மண்டபத்தில் கொண்டு வந்து வைத்து விழா நடத்துவது வழக்கமாம். கமலக் கன்னியம்மன் கோயிலுள்ள இடம் மலையின் செங் குத்தான பாகத்தின் அடிவாரமாகும். அச் செங்குத் தான பாகத்தின் பக்கங்களில் மிகப்பெரிய தேன் கூண்டுகள் பல காணப்படும். இங்குள்ள இருள ரென்ற வகுப்பினர் மிக சாமர்த்தியமாக அத்தேன் கூண்டுகளை யழித்துத் தேன் சேகரித்து விற்பனைக் குக் கொடுப்பார்கள். மேலும் மேற்கே சென்றால் பாதையின் தெற்கில் சுமார் ஐம்பதுகெஜ தூரத்தில் அழகிய படிக்கட்டுகளையுடைய ஒரு நீர்ச்சுனையைக் காணலாம். அந் நீர்ச்சுனைக்கு மேற்கே ஒரு பெரிய சுற்றுக்கட்டு மண்டபமிருக்கிறது. அம்மண்டபத் தில் முற்காலங்களில் மூலிகைகளைக்கொண்டு பொன் தயார் செய்துவந்ததாக சொல்லுகிறார்கள்.

அம் மண்டபத்திற்குத் தெற்கே மலை வெகு தூரம்வரை வியாபித்திருக்கிறது. சர்க்கரை குளத் திற்கு மேற்கே மலையின்மேல் தூக்குமேடை மண்டப மும், கைதிகள் கிணறும் கட்டப்பட்டிருக்கின்றன. இயற்கையாகப் பள்ளமாயிருந்த அவ்விடத்தை மேலும் ஆழமாக்கி சுற்றிலும் கல் சுவர் வைத்துள்ள அக் கிணற்றில் குற்றவாளிகளைத் தூக்கி எறிந்து விடுவார்களாம். ஆனால் அங்கு செல்லச் சரியான வழி கிடையாது. மறுபடியும் மேற்கு நோக்கிப் பாதையே சென்றால் மலையின் மேற்கு அலங்கத்தை யடையலாம். அங்கிருந்து பார்த்தால் திருவண்ணா மலை நன்கு தெரியும். கார்த்திகை தீப சந்தர்ப்பத்தில்



ராஜகிரியின் செங்குத்தான பாகத்திற்கு. செல்லும் மரப்பாலம்.

செஞ்சியிலுள்ள ஜனங்கள் அங்கு சென்று திரு வண்ணுமலை தீபத்தைப் பார்ப்பது வழக்கம். அங் கிருந்து படிக்கட்டுகள் ஐந்தாவது மண்டபத்தை யடைகின்றன. அம்மண்டபத்திலிருந்து பாதை மேற்கு அலங்கத்தின் ஓரமாகவே செல்லுகிறது. அதன் பக்கத்திலேயே மலையின் செங்குத்தான பாக மும் தெரியும். மலையின் செங்குத்தான பாகம் இதர பக்கங்களில் இயற்கையாகவே செங்குத்தாகவும் தென்மேற்கு மூலையில் சரிவாகவும் இருந்துள்ளது. அச் சரிவான பாகத்தை உடைத்து செங்குத்தாகச் செய்திருப்பதை அங்கு காணலாம். பாதை ஆருவது மண்டபத்தைத் தாண்டிச் சென்றதும் செங்கற் படிக் கட்டுகளுள்ள நீண்ட சதுர வடிவமான குளம் காணப்படும். அக் குளத்தின் வடக்குச் சுவற்றில் நான்கு இடங்களில் குழாய்கள் பதித்த அடை யாளங்கள் தென்படுகின்றன. இக் குளத்தில் நீரைத் தேக்கி இங்கிருந்து மலையின் மேல்பாகத்திற்குத் தண்ணீர் குழாய்கள் மூலம் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று யூகிக்கப்படுகிறது. சிறிதுதூரம் சென்ருல் பாதை ஏழாவது மண்டபத்தை யடை கிறது. அம்மண்டபத்திலிருந்து கிழக்கே நோக்கி ஞல் மலையின் சரிவு பாகத்திற்கும் செங்குத்தான பாகத்திற்குமுள்ள இடைவெளி சுமார் இருபதடி அகலத்திற்குமேல் காணப்படும். அங்கிருந்து மேலே ஏறும் படிகள்மீது சென்ருல் இடப்பக்கத்தில் ஒரு நீர்ச்சுனையைப் பார்க்கலாம். அதைக்கடந்து மேலே ஏறிஞல் மலையின் சரிவுபாகத்திற்கும் செங்குத்தான பாகத்திற்குமுள்ள இடைவெளியைக் கடப்பதற்கு முப்பதடி நீளமுள்ள மரப்பாலம் தெற்கு வடக்கில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அவ்விடை

வெளி சுமார் அறுபதடி ஆழமிருக்கும். இவ்விடைவெளியில் பாதி இயற்கையாகவும் பாதி வெட்டியெடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அப் பாலத்தின் மேல் நின்று கீழே நோக்கினால் பயங்கரமாயிருக்கும். முற்காலத்தில் அது இழுப்புப் பாலமாயிருந்ததாக சொல்லப்படுகிறது. அப் பாலத்தைக் கடந்ததும் மலையின் செங்குத்தான பாகத்தையடையலாம்.

மலையின் செங்குத்தான பகுதியிலும் பல முக்கியமான கட்டிடங்கள் உள்ளன. வழிக்குத் தென்மேற்கே ஒரு பெரிய களஞ்சியம் கட்டப்பட்டுள்ளது. அதன்மேல் தளத்திற்குச் செல்ல கிழக்கில் படிக்கட்டுகள் இருக்கின்றன. அங்கிருந்து பாதை கிழக்கு நோக்கி சென்று எட்டாவது மண்டபத்தை யடைகிறது. களஞ்சியத்திற்குக் கிழக்கே சிப்பாய்கள் தங்கிக் காவல்புரிய ஒரு திறந்த மண்டபமும், அம்மண்டபத்திற்குத் தென்மேற்கேயுள்ள விசாலமான பள்ளத்தில் ஒரு மூடு மண்டபமும் இருக்கின்றன. அரசனும் அந்தரங்க அதிகாரிகளும் கூடி அம்மூடுமண்டபத்தில் மந்திராலோசனை செய்வார்களாம. எட்டாவது மண்டபத்தைத் தாண்டிச் சிறிதுதூரம் சென்று, வழிக்கு வடக்கே செல்லும் படிக்கட்டுகள்மீது சென்றால் கஜானா கட்டிடம் தென்படும். அக்கட்டிடம் நீண்ட சதுரவடிவமுள்ள ஒரே அறையையுடையது. அவ்வறையின் [illegible]கியில் நாணயங்களைப் போடுவதற்கு ஒரு உண்டித்துளை இருக்கிறது. தரைக்குக் கீழே பணமிருக்குமிடத்திற்கு வர அடியில் ரகசிய வழி இருக்கிறதாம். அது தற்போது தெரிவில்லை. ஆனால் உண்டித்துளை வழியாக உள்ளேயிருந்து காற்று வருவதைத் தெரிந்து கொள்ளலாம். கஜானாவைக்காவல்புரியும் சிப்பாய்கள்

தங்கியிருக்க அருகில் ஒரு பெரிய மண்டபமும் எதிரில் பீரங்கித்தாங்கியும் கட்டப்பட்டுள்ளன. கஜானாவைக்கடந்து வழி மலையின் உச்சிபாகத்தை யடைகிறது. வழியின் வலது பக்கத்தில் ஒரு விசாலமான பாறைக்கடியில் நீர்ச்சுனை ஒன்றிருக்கிறது. அச்சுனைக்குள்ளிருக்கும் ஜலத்தில் சூரிய வெளிச்சமே படமுடியாதாகையால் ஜனங்கள் இதை சூரியன்படாத சுனை என்று சொல்லுகிறார்கள். சுனைக்கு வடக்கில் வழிக்கு இடதுபக்கம் நான்கு பட்டைத் தூண் உருவத்தில் சுமார் முப்பதடி உயரமுள்ள கொடிமேடையுண்டு. அதில் ஏற்றிவைக்கப்படும் கொடி செஞ்சிப் பகுதியிலுள்ள எல்லா இடங்களுக்கும் தெரியும். அதற்கு வடக்கே ப உருத்தில் இருக்கும் திறந்த மண்டபத்திலிருந்து வடக்கே வெகு தூரத்திலுள்ள விரோதிகளையும் பார்க்கமுடியும். மேலும் கிழக்கே சென்றால் ஒரு பெரிய சபா மண்டபத்தைக் காணலாம். அதுவே மலையின் உச்சி பாகத்திலுள்ள மிகப் பெரிய அடைப்பு மண்டபமாகும். அதினுள்ளே செல்ல ஒரு வாயிலும் காற்றோட்டத்திற்காக மூன்று ஜன்னல்களும் உள்ளன. அம் மண்டபத்திற்குள்ளேயிருந்து பேசினால் பெருத்த எதிரொலி யுண்டாகும். மண்டபத்தின் வடக்கில் வெளிப்பக்கத்தில் குறுகிய படிக்கட்டுகள் மேல் மெத்தைக்குப்போகும் வழியாகும். மண்டபத்தின் மேல் மெத்தையே கோட்டையின் மிக உயர்ந்தபாகம். அங்கிருந்து கோட்டைப்பிரதேசம் முழுவதையும், கோட்டையின் இயற்கை அரண்களையும் பார்க்கமுடியும்.

வசந்தகாலத்தில் மாலை நேரங்களில் அம் மெத்தையின்மேல் கட்டியிருக்கும் திண்ணையில்

அரசன் வந்து தங்கிச் செல்வது வழக்கமாம். அம் மண்டபத்திற்கு வடகிழக்கே அழகிய ரங்கநாதர் கோயிலும், அக்கோயிலுக்குக் கிழக்கே மிகப் பழைமையாய் தோன்றும் சிறிய சிவன் கோயிலும் காணப்படும். சபாமண்டபத்திற்குக் கிழக்கே பெரிய மணிக்கூண்டு கட்டப்பட்டிருக்கிறது. இது மூன்று அங்கணங்களையுடைய சதுரக் கட்டிடம். மேல்புறம் வட்டமானது இதில் ஒரு நேரமறியும் கருவியும், பெரிய நாதந்தரும் மணியும் பொறுத்தப்பட்டிருந்ததாம். கோட்டைப் பிரதேசத்திலும் நகரிலுமுள்ளவர்களுக்கு நேரத்தையும் அரசாங்கத்தின் இதர அறிக்கைகளையும் அம்மணியோசைமூலம் தெரிவிப்பார்களாம். தற்போது புதுச்சேரி பெரிய மணிக்கூண்டிலிருப்பது இம்மணிக்கூண்டிலிருந்து எடுத்துச் சென்ற மணியேயென்று சொல்லுகிறார்கள். சபா மண்டபத்திற்குத் தெற்கில் இறங்கும் வழியே சென்றால், ஒரு திறந்த மண்டபம் காணப்படும். அம் மண்டபத்தில் பன்னிரண்டடி நீளமுள்ள ஒரு பீரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அப்பீரங்கியின் நுனிப் பக்கத்தில் No. 830 என்றும் மத்தியில் 616 என்றும், அடிப்பக்கத்தில் 7560 என்ற லக்கமும் சோட்டஜ் என்ற தமிழ் எழுத்துக்களும், High Court of Bengal V. O. என்ற ஆங்கில வார்த்தைகளும் வரையப்பட்டுள்ளன. இன்னும் சில எழுத்துக்கள் நன்கு தெரியவில்லை. இப்பீரங்கி எப்பொழுது யாரால் வைக்கப்பட்டதென்பதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை. இவையன்றிப் பல சிறு மண்டபங்களும், காவலர்கள் தங்குமிடங்களும், பீரங்கித் தாங்கிகளும் பல விடங்களில் கட்டப்பட்டுள்ளன.



ராஜகிரி நான்காவது மண்டபத்தில்
ஒன்பதடி நீளமுள்ள பெரிய பீரங்கி.

# கிருஷ்ணகிரி.

இதைக் கிருஷ்ணகிரியென்றும் சின்ன மலையென்றும் சொல்லுவதுண்டு. கோட்டைப் பிரதேசத்திலுள்ள மூன்று மலைகளில் இதுவே சிறியது. ராஜகிரியைவிட இம்மலை உயரத்திலும் குறைந்தது. ராஜகிரியின்மேல் கட்டிடங்கள் கட்டியபிறகு இம்மலையின் மேலுள்ள கட்டிடங்கள் கட்டியதால் அவை அதிகம் சிதைந்து போகாமல் அழகாகக் காணப்படுகின்றன. கோட்டைப் பிரதேசத்தின் வடக்கேயுள்ள இம்மலையின் மேலேற மூன்று வழிகளுண்டு. ஒன்று கிழக்கு அலங்கத்திற்கு நேராக உள்ள செங்குத்தான படிக்கட்டுகள். மற்றொன்று மேற்கு அலங்கத்திற்கு நேராகஉள்ள படிக்கட்டுகள். இவைகளின் மத்தியிலுள்ளது மூன்றாவது படிக்கட்டுகள். இவைகளில் கடைசி இரண்டும் சிதைந்திருப்பதால் முதலில் சொன்ன கிழக்கு அலங்கத்திற்கு நேராகவுள்ள படிக்கட்டுகளே தற்போது மலையின்மேல் ஏறுவதற்குப் பயன்பட்டு வருகின்றன. மலையின் உச்சியில் மலையைச்சுற்றி இரண்டு அலங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. அடி அலங்கத்திற்குள் மலையின் தென்மேற்கு மூலையில் இரண்டு பெரிய களஞ்சியங்கள் இருக்கின்றன. அக் களஞ்சியங்களுக்கு மத்தியில் முப்பதடி நீளமும் பதினைந்தடி அகலமும் பத்தடி ஆழமுமுள்ள எண்ணைக் கிணற்றைப் பார்க்கலாம். அது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்திற்கும் மேல்புறத்தில் சதுரமான சிறு சந்துகள் உள்ளன. அவைகளில் ஒன்றில் எண்ணையும் மற்றொன்றில் நெய்யும் ஊற்றி வைத்திருந்ததாக சொல்லப்

படுகிறது. அடி அலங்கத்திற்குள் வேறுகட்டிடங்கள் இல்லாவிட்டாலும் அலங்கத்தைச் சுற்றிவர உள் பக்கத்தில் நல்ல வழியுண்டு.

அடி அலங்கத்திலிருந்து மேலலங்கத்திற்குச் செல்ல தெற்குப்பக்கத்தில் படிக்கட்டுகளுண்டு. அப்படிகள்வழியே சென்றால் எதிரில், அழகிய வேலைப்பாடுள்ள கற்றூண்களையுடைய மண்டபத்துடனும் சுற்றுப்பிரகாரத்துடனும் அழகிய ரங்கநாதர் ஆலயம் காணப்படும். அக்கோயிலுக்குப் பின்னால் நான்கு அழகிய தூண்களின்மேல் கலியாண மண்டபமொன்று கட்டப்பட்டுள்ளது. விசேஷ காலங்களில் அம்மண்டபத்தில் சுவாமிக்குக் கலியாண விழா நடத்துவார்களாம். ஜனங்கள் அமர்ந்திருப்பதற்காக அம்மண்டபத்தைச் சுற்றிலும் விசாலமான திறந்த மண்டபங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அம்மண்டபங்களுக்கு வடக்கில் செங்கல் படிக்கட்டுகளுள்ள நீண்ட சதுர வடிவத்தில் ராஜகிரியிலுள்ளதுபோன்ற குளத்தைக் காணலாம். இதில் தண்ணீரைத் தேக்கி இங்கிருந்து கிருஷ்ணகிரியிலுள்ள இடங்களுக்குத் தண்ணீர் அளித்திருக்க வேண்டுமென யூகிக்க இடமிருக்கிறது. வடகிழக்கு மூலையில், இறங்குவதற்கு அழகிய படிக்கட்டுகளுடன் நீர்ச்சுனை ஒன்றிருக்கிறது. அதன்பக்கத்தில் பெரிய பீரங்கித் தாங்கியும் அருகில் சிப்பாய்கள் தங்கியிருக்கப் பெரிய திறந்த மண்டபமும் உள்ளன. மண்டபத்திற்குத் தெற்கில் அழகிய சுற்றுப்பிரகாரத்தையும் உயர்ந்த கோபுரத்தையுமுடைய அம்மன் கோயிலைக் காணலாம். அம்மன் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள பல திறந்த மண்டபங்களில் மத்தியிலுள்ள மண்டபத்தின் மேல் மிக அழகான சபா மண்டபம் கட்டப்

73A

பட்டிருக்கிறது. அதுவே மலையில் உயர்ந்த பாகம். அங்கிருந்து கோட்டை முழுவதையும், சுற்றியுள்ள இயற்கை அரண்களையும் நன்கு காணமுடியும். அச் சபா மண்டபம் முஸ்லீம் பாணியில், முழுதும் செங் கல்லினல் ஒட்டப்பட்டு மஞ்சள் வர்ணம் பூசப் பட்டிருக்கிறது. மண்டபத்தின் மத்தியில் அரசன் அமர்ந்திருக்க அழகிய சதுர மேடையும், நான்கு பக்கங்களிலும் மந்திரிகள் தங்கியிருக்க நான்கு மேடைகளும் பார்க்க விநோதமாயிருக்கும். கடுமை யான கோடை வெய்யிலிலும் அங்கு குளிர்ந்தகாற்று ரமணீயமாக வீசும். அங்கு சென்ருல் மறுபடியும் இறங்கிவர மனம்வராது. இத்தகைய வேலைப் பாடுள்ள சபாமண்டபம் தென்னிந்தியாவிலுள்ள கோட்டைகளில் எங்குமில்லை யென்று சொல்லு கிருர்கள்.

---

## சந்திரகிரி.

இது கோட்டைப் பிரதேசத்தின் தெற்குப் பக் கத்தில் கிழக்கு மேற்காக வியாபித்திருக்கும் நீள மானமலை. இதைச் சக்கிலி துர்க்கமென்றும் சக்கிலி மலை யென்றும் சொல்லுவதுண்டு. இம்மலையின் மேலேறுவதற்குக் கிழக்கு அலங்கத்திற்கு நேராக மலையின் வடகிழக்கு மூலையில் ஒன்றும், மலையின் மேற்குப்பக்கத்தில், கோட்டையின் உட்புறத்தில் மற்ருென்றுமாக இரண்டு படிக்கட்டுகள் உள்ளன. இரண்டும் சிதைந்திருப்பதால் மலையின்மீது சுலப மாக ஏறமுடியாது. ஆனல் இம்மலையின்மீது பெரிய

கட்டிடங்களோ கோயில்களோ கிடையாது. நான்கு சிறிய மண்டபங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. அம்மலையின்மீது தோல் தொழிற்சாலை இருந்து வந்துள்ளது. குதிரைக்கு வேண்டிய சேணங்களும், சிப்பாய்களுக்குத் தேவையான செருப்பு, இடுப்புப்பட்டை முதலிய தோல் சாமான்களும், அக்காலத்தில் வழங்கிவந்த தோல் நாணயங்களும் அம்மலையிலுள்ள தோல் தொழிற்சாலையிலேயே செய்துவந்தார்கள். ஆனால் அத்தொழிற்சாலையின் சின்னங்கள் இப்பொழுது ஒன்றும் தென்படவில்லை. அம்மலைக்கும் தனியே அலங்கமுண்டு. மலையில் ஏராளமான புறாக்கள் வசிப்பதால் வேட்டையாடு பவர்கள் மிகுந்த சிரமத்துடன் மேலே ஏறி புறாக் களை வேட்டையாடி வருவது வழக்கம். அம்மலை யின் மேற்குபக்கத்தில் ஒரு தனிக்குன்றின்மேல் ஒரு கட்டிடம் காணப்படும். அங்கு போவது மிகவும் கஷ்டம். அன்னியநாட்டு அரசரையோ அல்லது சேனாதிபதிகளையோ கைதிசெய்து கொண்டுவந்தால் அவ்விடத்தில்தான் பாதுகாப்பில் வைப்பார்களாம். கிழக்கு மேற்கு அலங்கங்கள்மீதும் மலைகளின்மீது மாகக் கோட்டைப் பிரதேசத்தைக் கீழே இறங்கா மலே சுற்றிவரலாம்.

---

## கோட்டைக்கு வெளிப்புறம்.

கோட்டைக்கு வெளியில் வயல்களிலும் காடு களிலும், ஆற்றங்கரையோரத்திலும், சிறு குன்றுகள் மீதும், ஆங்காங்கே பல கோயில்களும், மசூதிகளும், மண்டபங்களும் காணப்படும். தென்னாட்டிலும்



கிருஷ்ணகிரியின் உச்சியிலுள்ள சபா மண்டபம்.

75

வடநாட்டிலுமுள்ள முக்கியமான ஆலயங்களின் பெயரால் இங்கு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கோட்டைக்கு வெளியே சந்திரகிரியின் தெற்கு அடிவாரத்தில் பல விசித்திர வேலைப்பாடுள்ள தூண்கள் நிறைந்த மண்டபங்களையும், அழகிய கோபுரங்களையுமுடைய **பட்டாபிராமன் கோயில்** இருக்கிறது. இது பெரிதும் சிதைந்துபோயிருந்தாலும் தன் பண்டைப் பெருமையை இழக்காமல் காண்போருக்கு மகிழ்ச்சியளித்து வருகிறது. செஞ்சிக்கோட்டை பிரஞ்சுக்காரர்கள்வசமிருந்தகாலத்தில் புதுச்சேரியில் **டூப்ளே** சிலை நாட்டுவதற்கு அஸ்திவாரம் போடவும் மேடை கட்டவும், இக் கோயிலிலிருந்து ஏராளமான கருங்கற்களைக் கொண்டுபோய்விட்டார்கள். மேலும் கோட்டையிலிருந்த கோயில்களிலிருந்து பல அழகிய விலையுயர்ந்த விக்கிரகங்களைப் பிரான்சு தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இன்றும் பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு பொருட்காட்சி சாலையில் அவ்விக்கிரகங்களில் சில இருக்கின்றனவாம். மற்றும் செஞ்சிக்கோட்டை ஆங்கிலேயர் வசமான பிறகு சென்னையில் **நீலன்** சிலை நாட்டுவதற்கு அஸ்திவாரம் போடுவதற்காக இங்குள்ள பட்டாபிராமன் கோவிலிலும் வெங்கட்டராமன் கோவிலிலுமுள்ள கருங்கற்றூண்களை எடுத்துச் செல்லலாமென அப்போது தென்னாற்காடு ஜில்லா கலைக்டராயிருந்த ஒரு ஆங்கிலேயர் சிபார்சு செய்தாராம். ஆனால் ஏதோ காரணங்களை முன்னிட்டு அப்படிச் செய்ய முடியாமல் போய்விட்டதாம். பட்டாபிராமன் கோயிலையடுத்துப் பல மண்டபங்களும் அழகிய கருங்கற்படிகளுள்ள ஒரு பெரிய குளமும் இருக்கின்றன. அவைகளைச்சுற்றிப் பல வீடுகள் கட்டியிருந்த அடை

யாளங்கள் காணப்படுவதால் முற்காலத்தில் நகரின் பிரதான இடம் அங்கேயே இருந்ததாக சொல்லு கிறார்கள்.

கோட்டைக்கு வடக்கே ஒருமைல் தூரத்தில் **திருநாதன் குன்றம்** என அழைக்கும் சிறு குன்று ஒன்றுள்ளது. அக்குன்றின் மேலேறுவதற்குப் படிகளுண்டு. குன்றின் உச்சியிலுள்ள பெரிய பாறையில் இருபத்துநான்கு ஜைனமத தீர்த்தங் கரர்களுடைய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மற்றும் ஒரு ஜைன கல் விக்கிரகம் இரண்டாய் உடைந்து காணப்படுகிறது. ஒவ்வொரு வருடத் திலும் ஏராளமான ஜைனர்களும் சித்தாமூர் ஜைன மடாதிபதியும் இங்கு கூடி தீர்த்தங்கரர் விக்கிரகங் களுக்கு அபிஷேக ஆராதனை நடத்துகிறார்கள். அக் குன்றின் மேற்குப் பக்கமாயுள்ள ஒரு பாறையில் "ஐம்பத்திரண்டு அனுசம் நோற்ற சந்திர நந்தியார் நிசீதிகை" என்ற கருத்துக்கொண்ட நாகர எழுத் துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. சங்கராபரணி நதிக் கரையில் சில விடங்களில் ஆலயங்களும், படிக்கட்டு களும், ஆராதனை மண்டபங்களும் கட்டப்பட்டிருக் கின்றன. முற்காலத்தில் சில குறிப்பிட்ட தினங் களில் சுவாமியை ஆற்றிற்குக் கொண்டுவந்து மண்ட பங்களிலிருத்தி விழா நடத்துவது வழக்கமாம். இப் பொழுதும் ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக தினத்தன்று சிங்கபுரத்திலிருந்து ரங்கநாத சுவாமி யைக் கொண்டுவந்து சங்கராபரணி நதிக்கரையி லுள்ள மண்டபத்திலிருத்தி சிறப்பான உற்சவம் நடத்தி வருகிறார்கள்.

79

# சிங்கபுரம்.

தற்போதைய செஞ்சிக்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்தில் சிங்கபுரம் என்ற சிறு கிராமம் உள்ளது. இக்கிராமம் மிகப் புராதனமானது. திராவிடர்கள் காலத்திலேயே இக்கிராமம் பிரசித்தியடைந்துள்ளது. பல்லாண்டுகள் திராவிடர்கள் செஞ்சியில் கோட்டை கட்டுவதற்கு முன்பாகவே சிங்கபுரத்தையடுத்த மலையில் திராவிடர்களால் **காளி கோயில்** கட்டப்பட்டிருக்கிறது. ஊருக்குத் தெற்கே இருக்கும் மலையில் கிழக்குப் பக்கத்தில் அடிவாரத்திலிருந்து நூறடி உயரத்தில் ரங்கநாதர் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது கோயிலுக்குப்போக மலைச் சரிவில் அழகிய படிக்கட்டுகளுண்டு. இக்கோயில் மிக்கப் பிரசித்திபெற்றது. செஞ்சிக்கு விஜயம் செய்யுமெல்லோரும் சிங்கபுரத்திற்கு அவசியம் போவது வழக்கம். பாறையைக் குடைந்து கோயிலின் மூலஸ்தானமும் அதில் பள்ளிகொண்ட உருவில் ரங்கநாதரும் அமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கத்திலிருப்பதைவிட இங்குள்ள ரங்கநாதர் மூல விக்கிரகம் பெரியது. தென்னாட்டிலுள்ள ரங்கநாதர் விக்கிரகங்களில் இதுவே பெரியதென்று சொல்லுகிறார்கள்.

ரங்கநாதர் சன்னதிக்குத் தெற்கே அம்மன் சன்னதி இருக்கிறது. அச்சன்னதிக்குள்ளே சென்றால் பழைய திராவிடத் தெய்வமாகிய காளியின் கற்சிலையைக் காணலாம். அம்மன் சன்னதியின் தெற்குச் சுவற்றிலிருந்து கீழே ஒரு சுரங்கவாயில் செல்லுகிறது. அச்சுரங்கம் செஞ்சி அரண்மனைக்குச் செல்லுகிறதென்றும், அவ்வழியாகவே செஞ்சியி

விருந்து தேசிங்கு கோயிலுக்குவந்து ரங்கநாதருடன் நேரில் பேசுவது வழக்கமென்றும் சொல்லுகிறார்கள். கோயிலையடுத்துத் தெற்குப் பக்கத்தில் அழகிய புஷ்கரணியுமுண்டு. இக்குளம் மலைமீதிருந்தாலும் எக்காலத்திலும் தண்ணீர் வடிவதில்லை. மலையின் உச்சியைச் சுற்றிவரவும் வழியுண்டு. உற்சவ காலங்களில் சுவாமி அவ்வழியே மலைப்பிரதக்ஷணம் வருவது வழக்கம். ரங்கநாதர் கோயிலுக்கு மேற்கே மலையினுச்சியில் லக்ஷ்மி ஆலயமென்ற சிறு கோயிலும், அதையடுத்து லக்ஷ்மி தீர்த்தமென்ற நீர்ச்சுனையும், அதனருகிலேயே ராமர் சன்னதி என்றழைக்கும் மண்டபமும், அதையடுத்து ராமர் தீர்த்தமென்றழைக்கும் ஒரு குளமும் இருக்கின்றன. மலையின் மேற்குச் சரிவிலுள்ள ஒரு சிறு அழகிய மண்டபமும் பக்கத்திலுள்ள நீர்ச்சுனையும் பார்க்க ரமணீயமாயிருக்கும். வைகுண்ட ஏகாதசி தினத்தில் இங்கு சிறப்பான உற்சவம் நடக்கும்பொழுது ஏராளமான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். தவிர மாசிமாதம் மகதினத்தன்று ரங்கநாதர் கோயிலிலுள்ள இரண்டு உற்சவர் விக்கிரகங்களில் ஒன்று செஞ்சியில் சங்கராபரணி நதிக்கரையில் நடக்கும் உற்சவத்திற்கும், மற்றொன்று புதுச்சேரியில் கடற்கரையில் நடக்கும் உற்சவத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இக்கோயிலின் எதிரிலுள்ள மேடையிலிருக்கும் நந்தியாவட்டைச் செடியும் எலுமிச்சை மரமும் பல வருஷங்களாக உயிரோடிருந்து வருவதாகக் கூறப்படுகிறது. ரங்கநாதர் கோயிலுக்கு வடக்கே இடிந்து கிடக்கும் பழைய நரசிங்கப் பெருமாள் கோவிலையும் பக்கத்தில் ஒரு சுனையையும் காணலாம்.

௯௧

# மேலச்சேரி.

இது சிங்கபுரத்திற்கு மேற்கே இரண்டு பர்லாங்கு தூரத்திலுள்ள புராதன பிரசித்தமான கிராமம். ஒரு காலத்தில் இது செஞ்சி நகரத்துடன் சேர்ந்திருந்தது. இதைப் பழைய செஞ்சியென்று சொல்லுவதுமுண்டு. தேசிங்கின் வம்சத்தைச் சேர்ந்த சிலர் இன்றும் இங்கு வசித்துவருகிறார்கள். இவ்வூருக்குத் தென்கிழக்கேயுள்ள ஒரு குன்றில் கல்லைக் குடைந்து அழகிய வேலைப்பாடுடன் அமைத்திருக்கும் சிவன்கோயில் காணத்தக்கது. இவ்வூருக்குத் தென்மேற்கேயுள்ள திரௌபதியம்மன் கோயிலும் குளமும் பிரசித்தமானவை. தென்னாட்டில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்ட கோவில் இதுவேயாகையால் இங்குவந்து மண்ணெடுத்துச்சென்று வேறு இடங்களில் புதிய திரௌபதியம்மன் கோவில் அமைப்பது வழக்கம். மேலும் இவ்வூரின் தெற்கில் நடுக்காட்டிலமைந்துள்ள பச்சியம்மன் கோவில் முக்கியத்துவம் வாய்ந்தது. காட்டுப் பிரதேசம் முழுதும் அத்தெய்வத்தின் காவலிலேயே இருப்பதாக ஜனங்கள் சொல்லுவதுடன், அடிக்கடிவந்து சுவாமிக்கு ஆராதனையும் செய்து போகிறார்கள்.

---

# இதரவிடங்கள்.

செஞ்சியிலிருந்து வடக்கே ஐந்துமைல் தூரத்திலுள்ள நீலாம்பூண்டியென்ற கிராமத்திலேயே நவாபின் படைகளுக்கும் தேசிங்கின் படைகளுக்கும்

சண்டை நடந்தது. ஆற்காட்டு நவாப் தான் வெற்றி பெற்றதின் அடையாளமாக நீலாம்பூண்டியருகில் வெற்றியடைந்த இடம் என்ற கருத்துக்கொண்ட பத்தியாபேட்டை யென்ற கிராமத்தையுண்டாக்கி அங்கு ஏராளமான முஸ்லீம்களைக் குடியேற்றினர். பத்தியாப்பேட்டைக் குளக்கரையில் மகமத்கான் சமாதியையும் பாராசாரி புதைத்த இடத்தையும் பார்க்கலாம். செஞ்சிக்கு வடமேற்கே பத்துமைல் தூரத்திலுள்ள மலையனூரில் பிரசித்திபெற்ற புராதன அம்மன் கோயிலுள்ளது. ஒவ்வொரு வருடமும் மாசி மாதத்தில் உற்சவம் நடக்கும்பொழுது ஏராளமான ஜனங்கள் வந்து கூடுவதுடன் ஒரு பெரிய மாட்டுச் சந்தையும் நடைபெறுகிறது. இது திராவிடர்கள் காலத்திய கோயிலாகும். செஞ்சிக்குத் தெற்கே பத்துமைல் தூரத்திலுள்ள மண்டகப்பட்டு என்ற கிராமத்திலுள்ள குன்றில் அழகிய மலைக் கோவிலும் கல் வளையங்களும் காணத்தக்கவை. இவ்விடத்தில் திராவிடர்கள் வாழ்ந்துவந்தார்களென்பதை அக் கல் வளையங்கள் மூலமறியலாம். திராவிடர்களுள் ஒருவர் இறந்தால் அவரை மண் ஜாடியில் வைத்துப் பூமியில் புதைத்து சுற்றிலும் கருங்கற் பாறைகளை வரிசையாய் நாட்டிவைப்பார்கள். அச் சமாதிகளே அக் கல் வளையங்களாகும். இன்றும் செஞ்சியைச் சுற்றியுள்ள பலகிராமங்களில் புராதன மண்டபங்களும் மலைக்கோயில்களும் உள்ளன.